TRANSPARENCY INTERNATIONAL SRI LANKA
a nation that upholds integrity




# இலங்கையில் நேர்மைத்திறன் மற்றும் ஊழல்:

## இளைஞர்கள் என்ன நினைக்கின்றனர்?

டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) என்பது ஊழலுக்கு எதிரான முன்னணி உலகளாவிய அமைப்பான டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனலின் (TI) தேசிய அத்தியாயமாகும். தன்னிறைவான அத்தியாயமாக செயற்படும் TISLஆனது, தமது மூலோயாங்களையும், செயற்பாடுகளையும் தாம் தீர்மானித்து, இந்த நிகழ்ச்சிகளுக்கான வளங்களை திரட்டுவதனை தமது பொறுப்பாக கொண்டு செயற்படுகின்றது.

ISBN - 978-955-1281-60-1

©2013 Transparency International Sri Lanka.
All rights reserved.

Designed by Haritha Dahanayaka
Photographs Hasika Kulatunge



# இலங்கையில் நேர்மைத்திறன் மற்றும் ஊழல்:

## இளைஞர்கள் என்ன நினைக்கின்றனர்?

ஜூலை 2013

# உள்ளடக்கங்கள்:


சுருக்கக் குறியீடுகள் 01

உருக்களின் பட்டியல் 01

TISL நிறைவேற்றுப் பணிப்பாளரின் செய்தி 02

இலங்கை இளைஞர் விவகார பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி! 02

**முக்கிய சாரம்சம் 05**

பிரதான முடிவுகள் 05

முடிவுரை மற்றும் பரிந்துரைகள் 08

**அறிமுகம் 09**

**முறையியல் 11**

வினாக்கொத்து வடிவமைப்பு 11

களச் செயற்பாடு 12

**பிரதான முடிவுகள் 15**

நேர்மைத்திறனை நோக்கியதாக இளைஞர்களின் மதிப்புக்களும், உளப்பாங்குகளும் 15

ஊழல் சார்ந்த அனுபவங்கள் 22

நேர்மைத்திறன் தொடர்பான சூழல் மற்றும் செயற்பாடு 30

**முடிவுரைகள் மற்றும் பரிந்துரைகள் 37**

முடிவுரைகள் 37

பரிந்துரைகள் 40

நிறைவுக் குறிப்புகள்: 44

## சுருக்கக் குறியீடுகள்

| | | |
|---|---|---|
| A/L | : | உயர்தரம் |
| DS | : | பிரதேச செயலாளர் |
| GCE | : | பொது சான்றிதழ் பரீட்சை |
| O/L | : | சாதாரண தரம் |
| NYSC | : | தேசிய இளைஞர் சேவைகள் பேரவை |
| TIS | : | டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் செயலகம் |
| TISL | : | டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா |
| TV | : | தொலைக்காட்சி |
| YIS | : | இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வு |

## உருக்களின் பட்டியல்

உரு


| | | |
|---|---|---|
| அ. | பால்நிலை அடிப்படையில் வெற்றிக்கான நேர்மைத்திறன் | 06 |
| அ. 3.1 | ஊழல் தொடர்பில் கிடைக்கக் கூடியதாக உள்ள தகவல்கள் தொடர்பில் இளைஞர் மற்றும் வயதானவர்களுக்கு வழங்கப்படும் விதம் | 07 |
| ஆ. 1 | இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில், 10 மாவட்டங்களில் இருந்து தோராயமாக தெரிவு செய்யப்பட்ட 1004 இளைஞர் மற்றும் 1012 வயதானவர்கள் | 13 |
| ஆ. 2 | இலங்கை மாவட்ட வரைபடம் - ஆய்வு முன்னெடுக்கப்பட்ட மாவட்டங்கள் | 13 |
| அ. 1-1: | ஒரு முக்கிய பிரச்சினையாக நேர்மைத்திறன் இன்மை | 15 |
| அ. 1-2: | ஒரு முக்கிய பிரச்சினையாக நேர்மைத்திறன் இன்மை: ஆண்கள் எதிர் பெண்கள் | 16 |
| அ. 1-3: | ஒரு முக்கிய பிரச்சினையாக நேர்மைத்திறன் இன்மை: நகர்ப்புறம் எதிர் கிராமப்புறம் | 16 |
| அ. 1-4: | ஒருவர் ஏனையோருக்கு ஒரு போதும் பொய் சொல்லாது / ஏமாற்றாது இருக்கும் போது நேர்மைத்திறன் இருக்கும் | 17 |
| அ. 1-5: | ஒருவர் ஒருபோதும் சட்டத்தை மீறாது இருக்கும் போது நேர்மைத்திறன் இருக்கும். | 17 |
| அ. 1-6: | ஒருவர் ஒருபோதும் ஊழலில் ஈடுபடாது இருக்கும் போது நேர்மைத்திறன் இருக்கும். | 17 |
| அ. 2.1: | ஒருவர் ஒருபோதும் ஊழலில் ஈடுபடாது இருக்கும் போது நேர்மைத்திறன் இருக்கும். | 18 |
| அ. 2.2: | எது மிகவும் முக்கியமானது, வருமானத்தை அதிகரித்தல் அல்லது நேர்மையாகவும், சட்டத்தை மதித்தும் இருத்தல்? | 19 |
| அ. 3-1: | ஏமாற்றுபவர்களை விட நேர்மையாக இருப்பவர் வெற்றிப் பெறுபவர்களுக்கு சந்தர்ப்பம் அதிகம் உள்ளதா? | 19 |
| அ. 3-2: | ஏமாற்றுபவர்களை விட நேர்மையாக இருப்பவர் வெற்றிப் பெறுபவர்களுக்கு சந்தர்ப்பம் அதிகம் உள்ளதா? (அடையப் பெற்ற கல்வியின் மூலம்) | 20 |
| அ. 4-1: | அவ்வாறு செய்யாதிருப்பது பாதகமற்றது என்ற நிலையில், பொய் கூறும் அல்லது ஏமாற்றும் நபர் ஒருவரின் உணரப்பட்ட நேர்மை, | 20 |
| அ. 4-2: | சட்டத்தை மீறுவதற்கு குடும்பத்தின் ஐக்கியத்தினை காரணமாக சுட்டும் நபரின் உணரப்பட்ட நேர்மை | 21 |
| அ. 4-3: | பாதகம் பெயரளவிலானதாக மாத்திரம் இருக்கும் போது மாத்திரம் ஊழலில் ஈடுபடும் நபரின் நேர்மை | 21 |
| அ. 4-4: | சட்டத்தை விட குடும்பத்தை உயர்ந்த நிலையில் வைக்கும் அல்லது பெயரளவிலான இலஞ்சங்களை வழங்கும் பொய் கூறும் / ஏமாற்றும், நபர்களின் உணரப்பட்ட நேர்மைத்திறன் தொடர்பில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற கருத்தாக்கங்கள் | 21 |
| ஆ. 1: | ஆறு பகுதிகளிலும் ஊழலுடன் சம்பந்தப்பட்ட இளைஞர் மற்றும் வயதானவர்களின் அனுபவங்கள் | 22 |
| ஆ. 2: | பால்நிலை அடிப்படையில் ஊழல் தொடர்பான இளைஞர் மற்றும் வயதானவர்களின் அனுபவங்கள் குறித்த ஒப்பீட்டு நோக்கு | 23 |
| ஆ. 1-1: | பொது நிறுவனங்களின் ஒட்டுமொத்த செயற்பாடு குறித்த கருத்தாக்கங்கள் | 24 |
| ஆ. 1-2: | பல்வகை பொது சேவை நிறுவனங்களின் உணரப்பட்ட நேர்மைத்திறன் | 24 |
| ஆ. 2-1: | குறிப்பிட்ட பயனைப் பெறுவதற்கு ஊழல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான விருப்பம் | 25 |
| ஆ. 3-1: | ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம். | 26 |
| ஆ. 3-2: | ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம், பால்நிலை அடிப்படையில் | 26 |
| ஆ. 3-3: | ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம், வீடு அடிப்படையில் | 27 |
| ஆ. 4-1: | ஒரு முக்கியமான ஆவணத்தைப் பெறுவதற்கு இலஞ்சம் கொடுப்பதற்கான விருப்பம், பால்நிலை அடிப்படையில் | 27 |
| ஆ. 4-2: | ஒரு முக்கியமான ஆவணத்தைப் பெறுவதற்கு இலஞ்சம் கொடுப்பதற்கான விருப்பம், வீடு அடிப்படையில் | 28 |
| ஆ. 5-1: | முறையற்ற தொழில் நியமனம் அல்லது பாடசாலை அனுமதியை ஏற்றுக் கொள்வதற்கான விருப்பம் (வீடு அடிப்படையில்) | 28 |
| ஆ. 6-1: | உங்களுடைய 'கனவு தொழிலைப் பெறுவதற்கு முறையற்ற தொழில் நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்கான விருப்பம் | 29 |
| இ. 1: | இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில், ஊழலுக்கு எதிராக போராடுவதில் இளைஞர்களின் வகிபாகங்கள் குறித்த கருத்தாக்கங்கள் | 30 |
| இ. 2: | இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில், ஊழலுக்கு எதிராக போராடுவதில் இளைஞர்களின் வகிபாகங்கள் குறித்த கருத்தாக்கங்கள், வீடு அடிப்படையில் | 30 |
| இ. 3: | இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் ஊழல் குறித்து அறிக்கைப்படுத்துவதற்கான விருப்பம் | 31 |
| இ. 4: | ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பாது இருப்பதற்கு வழங்கும் காரணங்கள், பால்நிலை அடிப்படையில் | 32 |
| இ. 5: | இளைஞர்கள் மற்றும் வயதானவர்களின் தகவலுக்கான மூலம் | 33 |
| இ. 6 | இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் இலங்கையில் உள்ள ஊழல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குகள் குறித்த அறிவு | 33 |
| இ. 7: | இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் இலங்கையில் உள்ள ஊழல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குகள் குறித்த அறிவு, கல்வி அடைவுக்கு ஏற்ப | 34 |

# TISL நிறைவேற்றுப் பணிப்பாளரின் செய்தி

ஊழலை ஒழிப்பதற்கும், உலகளாவிய வகையில் நேர்மைத்திறனையும், நல்லாட்சியையும் மேம்படுத்துவதற்கும் அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உலகளாவிய அமைப்பான டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் அமைப்பின் இலங்கைக்கான உள்ளூர் கிளையாக டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) விளங்குகின்றது.

ஒரு தசாப்தத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட நாள் முதலாய், ஊழல் அற்ற சமூகமாய் இலங்கையை மாற்றுவதற்கான பயணத்திலே பல்வேறு பங்குதாரர்களுடன் இணைந்து TISL பணியாற்றி வருகின்றது. சமூகத்தின் மிகவும் துடிப்பான மற்றும் உற்சாகமான பிரிவாக விளங்கும் இளைஞர்கள், ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் மிகவும் முக்கியமான வகிபாகத்தை கொண்டுள்ளனர். இந்த முக்கியத்துவத்தை உணர்ந்து கொண்டு, டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனலினால் ஆரம்பிக்கப்பட்ட நாடளாவிய ரீதியான ஆய்வின் ஒரு அங்கமாக இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வு ஒன்றினை TISL இலங்கையில் ஆரம்பித்தது. இந்த ஆய்வின் ஏனைய பங்குபற்றும் அத்தியாயங்களாக ஃபிஜி, இந்தோனேஷியா மற்றும் தென்கொரியா ஆகியன விளங்குகின்றன.

தேசிய இளைஞர் சேவைகள் பேரவையின் ஆதரவுடன் திறந்த பல்கலைக்கழகத்தினால் இந்த ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. இலங்கை இளைஞர்களின் தற்போதைய நேர்மைத்திறன் அளவினை புரிந்து கொள்வதற்கு இந்த ஆய்வின் முடிவுகள் நமக்கு உதவும். அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில், 10 மாவட்டங்களைச் சேர்ந்த 1004 இளைஞர்கள் இந்த ஆய்வுக்கான மாதிரியாக தெரிவு செய்யப்பட்டிருந்தனர். அத்துடன், கட்டுப்பாட்டு குழு என்ற அடிப்படையில் 1012 வயதானவர்கள் இந்த ஆய்வில் பங்குபற்றியிருந்தனர்.

இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வு முடிவுகளை மக்களுக்கு கொண்டு செல்வதற்கு முன்னர், பரிந்துரைக்கான உள்ளடக்கங்களை அடையாளம் காண்பதற்காக, ஆய்வின் முடிவுகள் குறித்து கலந்துரையாடுவதற்கான மீளாய்வு கூட்டம் ஒன்றை TISL ஒழுங்கு செய்தது.சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள், ஊடகவியலாளர்கள் மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்கள் இந்த கூட்டத்தில் கலந்து கொண்டனர். ஊழலுக்கு எதிரான போராட்டத்தின் அடுத்த கட்ட திட்டமிடலில் இளைஞர்களின் ஈடுபாட்டிற்கான ஆதாரத்தின் அடிப்படையை, ஆய்வு முடிவுகள் வழங்கின.

இந்த ஆய்வினை வெற்றிகரமாக நிறைவு செய்தமைக்காக இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர். கலாநிதி சாந்த அபேசிங்க அவர்களுக்கும், களனி பல்கலைக்கழகத்தின் கலாநிதி. நாளக்க விக்ரமசிங்க அவர்களுக்கும், தேசிய இளைஞர் சேவைகள் பேரவையின் தலைவர் லலித் பியூம் பெரேரா அவர்களுக்கும், ஊழியர்களுக்கும் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

# இலங்கை இளைஞர் விவகார பணிப்பாளர் நாயகத்தின் வாழ்த்துச் செய்தி!

இவ்வாறான தேசிய மட்ட ஆய்வு ஒன்றை நடத்தியமைக்காக, இலங்கை இளைஞர் விவகார பணிப்பாளர் நாயகம் மற்றும் தேசிய இளைஞர் சேவைகள் பேரவையின் தலைவர் என்ற வகையில், டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவிற்கு நான் மிகுந்த கடமைப்பட்டுள்ளேன். தேசத்தை கட்டியெழுப்புவதற்கு இளைஞர்களை உற்சாகத்துடன் பயன்படுத்தி வரும் சந்தர்ப்பத்தில், நாட்டின் சமூக, பொருளாதார அபிவிருத்தியில் தாக்கம் புரியும் இந்த சமூக தடைகள் குறித்த இளைஞர்களின் மனநிலையை புரிந்து கொள்வதற்கு அது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.

ஆட்சிமுறை, ஊழல் மற்றும் இலஞ்சம் குறித்த இளைஞர்களின் புரிந்து கொள்ளலை அறிந்து கொண்டிருப்பது, நாளைய தலைவர்களான இன்றைய இளம் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், வலுப்படுத்துவதற்கும், NYSC போன்ற தேசிய நிறுவனங்களுக்கு உதவிகரமானதாகும். எனவே, இந்த வியாதியை எதிர்காலத்தில் ஒழிக்க முடியும். நாட்டில் உள்ள அனைத்து இளைஞர்களையும் உள்ளடக்கி, தேசிய அபிவிருத்தியில் இளைஞர்களை செயற்றிறன் மிக்கவர்களாக பங்கேற்கச் செய்வதற்கான செயற்பாட்டில் இலங்கை இளைஞர் அமைப்பு தற்போது ஈடுபட்டுள்ளது.

தற்போது 15-29 வயதுக்குட்பட்ட இளைஞர்கள், இலங்கையில் மக்கள் தொகையில் குறிப்பிட்டளவு விகிதத்தைக் (அண்ணளவாக 30%) கொண்டுள்ளனர். அவர்களுடைய அபிலாஷைகள் வேறுபட்டவையாகும். கொள்கை வகுப்பாளர்கள் அவை தொடர்பில் கவனம் செலுத்தல் வேண்டும். 2010ஆம் ஆண்டு பொறுப்பேற்ற சந்தர்ப்பத்தில் இதனை எம்மால் அறிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இளைஞர்களின் உயர்ந்தளவு எதிர்பார்ப்புக்களை எட்டுவதற்கு முறைகள், அணுகுமுறைகள், நிகழ்ச்சிகள் மற்றும் செயற்றிட்டங்களை மீள்வடிவமைத்தோம். இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர் கௌரவ டலஸ் அழகப்பெருமவின் முழுமையான ஆசியுடன் NYSCஇனால் 'இலங்கை இளைஞர்' என்ற கருத்தாக்கம் உருப்பெற்றது. இளைஞர் அபிவிருத்தி செயற்பாட்டில் ஈடுபட்டு வரும் ஏனைய அனைத்து பங்குதாரர்களாலும் இது ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இலங்கை இளைஞர் பாராளுமன்றமும் எம்மால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. என்னைப் பொறுத்தவரையில், பெரும்பான்மையான இளைஞர் தொகையை கொண்டிருப்பது சிறந்த வளமாகும். அடிமட்ட இளைஞர்களை எட்டுவதற்கான பொறியமைப்பான இளைஞர் கழகங்களின் இலங்கை சம்மேளனமானது தற்போது அனைத்துப் பகுதிகளையும் சேர்ந்த 1.2 மில்லியன் இளைஞர்களை பதிவு செய்துள்ளது. இதன் மூலம் அர்த்தமுள்ள இளைஞர் பங்களிப்பு மற்றும் இளைஞர் வலுவூட்டலுக்கும் வழிவகுத்துள்ளது. நாட்டில் உள்ள பழமையானதும், பாரியதுமான நிறுவனம் என்ற இந்த தேர்ச்சி தொடர்பில் இலங்கை இளைஞர் அமைப்பு பெருமிதம் கொள்கின்றது. இந்த பிராந்தியத்திலேயே பழமையான மற்றும் பாரிய அமைப்பாகவும் இது விளங்குகின்றது.

தேசிய அபிவிருத்தியில் ஒரு புறமும், தனிப்பட்ட வளர்ச்சியில் மறுபுறமும் என இளைஞர்கள் செயற்றிறனுடன் செயற்படுவதற்கான சந்தர்ப்பங்களை இந்த சூழல் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. எனினும், நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பதற்கு தனிப்பட்ட மற்றும் தொழில்சார் வளர்ச்சியில் ஆட்சிமுறை சார்ந்த அக்கறையை அவர்கள் கொண்டிருக்க வேண்டும் என நாம் உறுதியாக நம்புகின்றோம்.

இந்த வகையில், டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்காவினால் எடுக்கப்படும் முயற்சிகள் உயர்ந்த மட்டத்தில் வைத்து பாராட்டத்தக்கன.

லலித் பியும் பெரேரா (சட்டத்தரணி),
பணிப்பாளர் நாயகம், இலங்கை இளைஞர் விவகாரங்கள், மற்றும்
தலைவர், தேசிய இளைஞர் சேவைகள் பேரவை



# முக்கிய சாரம்சம்

இளைஞர்களே நமது நாட்டின் எதிர்காலம். இலங்கையில் 5 மில்லியன் இளைஞர்கள் உள்ளனர். மொத்த சனத்தொகையில் 26%ஆக இவர்கள் உள்ளனர். வேலைவாய்ப்பு என்பது பாரிய பிரச்சினையாக இருப்பதுடன், ஒவ்வொரு வருடமும் க.பொ.த (சா/த) பரீட்சையின் பின்னர் மற்றும் க.பொ.த (உ/த) பரீட்சையின் பின்னர் முறையே 150,000 மற்றும் 130,000 மாணவர்கள் பாடசாலை கட்டமைப்பில் இருந்து விலகுகின்றனர். இவர்கள் இதன் பின்னர் உயர் கல்வியை தொடர்பவர்கள் இல்லை. இதன் காரணமாக அடிப்படைக் கல்வியுடன் மாத்திரம் 92%ஆன இளைஞர்கள் வேலைவாய்ப்பினை தேடிச் செல்கின்றனர். அனைத்து இளைஞர்களுக்கும் பயனளிக்கும் சமத்துவம் மற்றும் பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்துவதற்கு, இளைஞர்களே தாமும் அந்த செயற்பாட்டில் முக்கிய பங்கினை வகித்தல் வேண்டும். இளைஞர்களின் எதிர்காலத்திற்கான இந்த வளர்ச்சியானது, நேர்மைத்திறன், நாணயம் மற்றும் ஊழலுக்கு எதிரான அர்ப்பணிப்பு என்பதன் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

இதன் காரணமாக, இளைஞர் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கும், இலங்கையில் ஊழலுக்கு எதிராக போராடுவதற்குமான செயற்பாடு ஒன்று தொடர்பில் டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) கவனம் செலுத்தியது. டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் செயலகம் மற்றும் ஃபிஜி, இந்தோனேஷியா மற்றும் தென்கொரியாவைச் சேர்ந்த தேசிய டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் கிளைகள் என்பவற்றுடன் கைகோர்த்து, நாடெங்கிலும் உள்ள இளைஞர்களுடன் இணைந்து, தமது சமுதாயங்களிலும், தேசிய மட்டத்திலும் மாற்றத்திற்கான முகவர்களாக இளைஞர்களை மாற்றும் பணியில் TISL ஈடுபட்டுள்ளது.

இந்த செயற்பாட்டின் முதலாவது படிமுறை இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வினை (YIS) முன்னெடுப்பதாகும். இந்த முழுமையான, நேரடியான நேர்காணல் அடிப்படையிலான ஆய்வானது, நேர்மைத்திறன் மற்றும் ஊழல் சார்ந்த இளைஞர்களின் கருத்தாக்கங்கள், உளப்பாங்குகள் மற்றும் நடத்தைகளை நோக்கிய அடிப்படை ஒன்றை உருவாக்குகின்றது. இலங்கை இளைஞர்களின் தற்போதைய நேர்மைத்திறன் மட்டங்கள் குறித்த அடிப்படை ஒன்றை உருவாக்கல் மற்றும் ஊழலுக்கும், நேர்மைத்திறன் மீறப்படலுக்கு எதிராகவும் இளைஞர்களின் பங்களிப்பு மட்டத்தை தீர்மானித்தல் என்பனவே YISஇன் மறைமுகமான குறிக்கோள்களாகும்.

டுவார்ட்ஸ் டிரான்ஸ்பெரன்சி வியட்நாம் மற்றும் அதன் பங்காளர்களால் ஆரம்பத்தில் வடிவமைக்கப்பட்ட ஆய்வு முறையியலையே YISஇற்காக TISL பயன்படுத்தியது. இலங்கையின் கலாசார மற்றும் சனத்தொகை தன்மைகளை வெளிப்படுத்தும் நோக்குடன் ஆய்வானது பரவலாக்கப்பட்ட போதிலும், ஏனைய நாடுகளில் உள்ள டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் அத்தியாயங்களுடன் அண்ணளவான ஒப்பீடுகளுக்கு துணை புரியக்கூடிய பிரதான கேள்விகளையும், கோட்பாடுகளையும் அது உள்ளடக்கியிருந்தது.

ஆயிரத்திற்கும் அதிகமான இளைஞர்கள் முகத்துக்கு நேரான நேர்காணல் மூலமான ஆய்வில் பதிலளித்ததுடன், மேலதிகமாக ஆயிரம் வயதானவர்கள் கட்டுப்பாட்டு குழுவாக பயன்படுத்தப்பட்டனர். பதிலளித்தவர்கள் அனைவரும் அவர்களது பால்நிலை, கிராமப்புற அல்லது நகர்ப்புற வதிவிடம், கல்வி மற்றும் வேறு மக்கள் தொகை தரவுகளின் அடிப்படையில் பதிவு செய்யப்பட்டனர். இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களில் இருந்தும், இளைஞர் மற்றும் வயதான பதிலளிப்பவர்களின் மாதிரிகள் தோராயமாக தெரிவு செய்யப்பட்டன. இதில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற மக்கள் தொகைகள் சமமான விகித அடிப்படையில் பிரதிநிதித்துவம் செய்வது கவனத்தில் கொள்ளப்பட்டது.

## அ. பிரதான முடிவுகள்

### அ. 1 நேர்மைத்திறனை நோக்கியதாக விழுமியங்களும், உளப்பாங்குகளும்

ஒவ்வொருவரும் அதனை பார்க்கும் விதமும், அதன் இயற்கையான மற்றும் செயற்கையான விழுமியம் போன்ற நேர்மைத்திறன் தொடர்பான இளைஞர்களின் எண்ணங்களை கண்டறிவதே YISஇன் முதலாவது இலக்காகும். எனவே, யதார்த்த வாழ்வில் இளைஞர்கள் தமது உளப்பாங்குகளை பொதுவாக அடையாளம் காண்பதற்கும், குறிப்பாக ஏனையோரின் உளப்பாங்குகளை அடையாளம் காண்பதற்குமான கேள்விகள் அவர்களிடம் எழுப்பப்பட்டன.

நேர்மைத்திறன் தொடர்பில் இலங்கை இளைஞர்கள் குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வழங்குகின்றமையை YIS வெளிப்படுத்தியது. எவ்வாறாயினும், நேர்மைத்திறன் என்பது என்ன மற்றும் நாளாந்த வாழ்க்கையில் நேர்மைத்திறன் எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது என்பதனை இலகுவாக புரிந்துகொள்வதற்கு இலங்கை மக்களின் பிரயோக வாழ்க்கை அனுபவங்கள் வழிவகுத்தது.

தமது சொந்த வாழ்க்கையில் நேர்மைத்திறன் என்பது மிகவும் முக்கியமானது என 88%ஆனவர்கள் நம்பும் நிலையில், இந்த அர்ப்பணிப்பானது எப்போதும் நடைமுறையில் சாத்தியமானது அல்ல என்ற உணர்வையும் இளைஞர்களிடம் இருந்து அறிந்துக் கொள்ளக் கூடியதாகவிருந்தது. குடும்பத்தின் ஐக்கியத்தை காப்பதற்காக, நேர்மைத்திறன் கொண்ட நபர் ஒருவர் சட்டத்தை மீறுவாரா என கேட்கப்பட்ட போது, பெரும்பான்மையானோர் ஆம் என பதிலளித்தனர். அதேவேளை, நேர்மையான நபர் என்பவர் சில சந்தர்ப்பங்களில் சட்டத்தை மீறுபவர் என 20%ஆனோர் நம்புவதுடன், சில சந்தர்ப்பங்களில் மாத்திரம், அது நிதிசார் வெற்றிக்கு வழியாக அமையுமாயின் நேர்மைத்திறனை கொண்டிருத்தல் சிறந்தது என 24%ஆனோர் ஆலோசனை வழங்குகின்றனர். மேலதிகமாக, நேர்மையாக இருத்தலும், விதிகளை பின்பற்றலும் வாழ்க்கையில் மிகவும் முக்கியமானது என 30%ஆனோர் முழுமையாக நம்புகின்றனர்.




உரு அ. 1 பால்நிலை அடிப்படையில் வெற்றிக்கான நேர்மைத்திறன்

நிதிசார் வெற்றியைப் பெறுவதற்கு ஏமாற்றுதல் சிறந்தது (30%) என்ற கருத்தைக் கொண்டிருக்கும் இலங்கை இளைஞர்கள் மத்தியில் காணப்படும் ஊழல் சார்ந்த நம்பிக்கையை எளிமையாக புரிந்துகொள்ளும் விடயமாக இந்த முடிவுகள் உள்ளன. அதிகளவிலான வாழ்க்கைச் செலவு மற்றும் நிலையற்ற தன்மையும், முரண்பாடும் என்ற வரலாற்றைக் கொண்ட நாடு ஒன்றில் ஆச்சரியமற்ற விடயமான நிதி சார்ந்த வெற்றியின் மீதான ஆர்வத்துடன் சம்பந்தப்பட்டதாகவும் இது உள்ளது.

## அ. 2 அனுபவங்கள் மற்றும் நடத்தைகள்

கடந்த வருடத்தில் 25% இற்கும் குறைவான இளைஞர்கள் நேரடியாகவே குறிப்பிடத்தக்க ஊழல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். எனினும், உண்மையான ஊழல் செயற்பாட்டில் குறைந்த அளவிலான ஈடுபாடு என்பது பதிவாகியுள்ள நிலையில், குறிப்பிடத்தக்க அளவிலான இளைஞர்கள் சில ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கான விருப்பத்தை வெளிப்படுத்தியுள்ளனர்.

கல்விசார் பின்னணியின் காரணமாக சுமார் 70% ஆன மாணவர்கள், ஊழலில் ஈடுபடாது இருப்பதுடன், 80% இற்கும் அதிகமானவர்கள் வேலைவாய்ப்பு நியமனத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அல்லது முக்கியமான ஆவணம் ஒன்றைப் பெற்றுக் கொள்வதற்கு முறையற்ற நடத்தையை பின்பற்றத் தயாராக உள்ளமையை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இளம் பெண்களிலும் பார்க்க இளம் ஆண்களிலேயே இந்த தன்மை அதிகம் இருக்கின்றது. அத்துடன் நகர்ப்புற இளைஞர்களிலும், கிராமப்புற இளைஞர்களே அதிக ஆர்வம் காட்டுகின்றனர். இது தனிப்பட்ட விழுமியங்களில், அல்லது இந்த பதிலளிப்பவர்கள் அதிகளவிலான ஒழுங்கற்ற நிபந்தனைகளை எதிர்கொள்ளுதல் என்ற நிலையின்பாற்பட்டதாக உள்ளது.

தமது உறவினர்களை மகிழ்ச்சியுறச் செய்வதற்கு அல்லது இலகுவாக செய்துவிடலாம் என்ற தெரிவிற்காக குறிப்பிட்ட சூழ்நிலைகளில் முறையற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டவர்களாக 40%ஆன நகர்ப்புற இளைஞர்களும், 23%ஆன கிராமப்புற இளைஞர்களும் இருப்பதனை YISமுடிவுகள் வெளிப்படுத்தியது. இலங்கையில் உறவினர்களுக்கு தகாத சலுகை அளித்தல் மற்றும் முறைசாரா உதவிகள் என்பனவற்றுக்கு முன்னுரிமை அளிக்கும் கலாசாரம் நிலவுவதனை இந்த முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. இவ்வாறான சமூக மற்றும் குடும்ப அழுத்தங்களின் காரணமாக, உறுதியான நேர்மைத்திறன் மீது நம்பிக்கை கொண்ட இளைஞர்களும் இது போன்ற முறையற்ற நடத்தைகளை தவிர்க்க முடியாதவர்களாக உள்ளனர்.

ஊழல் தொடர்பான இளைஞர்களின் அனுபவங்களானது, அவர்கள் நேர்மை மற்றும் ஊழலை எவ்வாறு பார்க்கின்றனர் என்பதில் செல்வாக்கு செலுத்துகின்றது. இதனால்,பொது நிறுவனங்களின் மீதான நம்பிக்கை தொடர்பான கேள்விக்கான பதிலை கண்டறிவதற்கு TISLதீர்மானித்தது. எதிர்வுகூறியவாறே, பொது உத்தியோகத்தர்கள் தொடர்பில், மிகவும் முக்கியமாக பொலிஸார் மற்றும் உள்ளூர் நிர்வாகம் தொடர்பில் இளைஞர்கள் அதிருப்தி நிறைந்த கருத்தையே கொண்டிருந்தனர். இந்த குழுக்களின் மத்தியில் ஏற்றுக் கொள்ளப்பட்ட உயர்ந்த அளவிலான ஊழலானது, இலங்கை இளைஞர்கள் மத்தியில் நேர்மைத்திறன் குறித்த மதிப்பினை மேலும் குறைவடையச் செய்வதாக அமைந்துள்ளது.

## அ. 3 இளைஞர் நேர்மைத்திறன் தொடர்பில் செல்வாக்குகள் மற்றும் நடவடிக்கை

இளைஞர்களின் கருத்துக்கள் எவ்வாறு அமைந்திருக்கின்றன என்பதனை TISLஇனால் கண்டறிய முடியுமாயின், அவர்களை சாதகமான வழியில் நெறிப்படுத்துவதும் சாத்தியமாகின்றது. இதனால், இலங்கை இளைஞர்கள் எந்தளவு தகவல் அறிந்தவர்களாக இருக்கின்றனர் மற்றும் சமூகத்தில் உள்ள ஊழல் மற்றும் நேர்மைத்திறன் தொடர்பில் எத்தனை அளவு அவர்கள் அறிந்துள்ளனர் என்பது குறித்து புரிந்து கொள்ளவும் லுஜளுமுயற்சித்தது.

தொலைக்காட்சி (31%), வானொலி (20%), மற்றும் கையடக்க தொலைபேசிகள் (18%) உள்ளடங்கலாக பரந்தளவிலான ஊடகத்திற்கான அணுகும் வசதியை இலங்கை இளைஞர்கள் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், இலங்கையின் பல பாகங்களில் இணைய பாவனை என்பது குறைவாக இருக்கின்றமையால், சமூக ஊடகம் அல்லது இணையத்தளம் ஊடாக முக்கியமான தகவல்களை இளைஞர்கள் பெற்றுக் கொள்ளும் அளவு குறைவாக உள்ளது (முறையே 5% மற்றும் 4%).

துரதிருஷ்டவசமாக நாட்டில் ஊழலுடன் சம்பந்தப்பட்ட விதிகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பில் இலங்கை இளைஞர்களுக்கு மிகவும் குறைந்தளவிலான வளங்களையும் இவை கொண்டுள்ளன. 6%ஆனவர்கள் மாத்திரம் நன்கு தகவல் பெற்றுக் கொண்டவர்களாக இருந்தனர். 'தகவல் பெறாதவர்கள்' அல்லது 'மிகவும் குறைவாக தகவல் பெற்றவர்கள்' என்ற எண்ணிக்கையை இணைத்துப் பார்க்கும் போது 55%ஆக இருந்தது. இது தொடர்பில் இலங்கையின் கல்வி முறையும், இலங்கை இளைஞர்களுக்கு கைகொடுப்பதாக இல்லை. முதல்நிலை, இரண்டாம் நிலை, மற்றும் மூன்றாம் நிலை கல்வி முறைகளுக்கு இடையில் ஊழல் விதிகள் மற்றும் ஒழுங்குகள் தொடர்பான தகவல்களில் எவ்வித மாற்றத்தையும் காணக் கூடியதாக இல்லை.




உரு அ. 3.1 ஊழல் சார்ந்து கிடைக்கக் கூடியதாக உள்ள தகவல்கள் தொடர்பில் இளைஞர் மற்றும் வயதானவர்களின் வீத பரவல்

முக்கிய சாராம்சம்

ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு விருப்பத்துடன் இருக்கின்றார்களா என இறுதியாக இளைஞர்களிடம் YIS கேள்வி எழுப்பியது. ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலேனும் ஊழலுக்கு எதிராக தமது குரல்களை எழுப்புவதற்கு 73%ஆனவர்கள் விருப்புடன் உள்ளதாக கூறியமை மகிழ்ச்சியளிப்பதாக இருக்கின்றது.

எவ்வாறாயினும், 7%ஆனவர்கள் மாத்திரமே உண்மையாக குரல் எழுப்புவதில் ஈடுபட்டிருந்திருக்கின்றனர். ஏனையோரில், மூன்றில் ஒரு பங்கினர் ஒதுங்கியிருந்துள்ளனர். எனவே, மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான ஆர்வம் கொண்டுள்ளவர்களுக்கு, அவர்களுக்கு தேவையான ஆதரவை வழங்கி வலுவூட்டல் என்பது மிகவும் முக்கியமானதாக உள்ளது.

## ஆ. முடிவுரை மற்றும் பரிந்துரைகள்

நேர்மைத்திறன் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாட்டில் உண்மையான மதிப்பினை இலங்கை இளைஞர்கள் கொண்டுள்ளனர். எவ்வாறாயினும், தகவல் பற்றாக்குறை மற்றும் ஊழல் அதிகாரிகள், குடும்ப வலையமைப்புக்கள் மற்றும் அன்றாட வாழ்க்கையில் உள்ள சமூக அழுத்தங்கள் என்பன இந்த அர்ப்பணிப்பினை குறைத்து விடுகின்றன.

பதிலளித்தவர்களில் ஆண்களினதும், பெண்களினதும் பதில்களுக்கு இடையில் உறுதியான வேறுபாடு இருந்தது. நேர்மைத்திறன் சார்ந்து சொல்லிலும், செயலிலும் உறுதி நிறைந்தவர்களாக பெண்கள் உள்ளனர். அதேபோன்று, கிராமப்புற இளைஞர்களிலும் பார்க்க நகர்ப்புற இளைஞர்கள் நேர்மைத்திறன் குறித்த அதிக அக்கறை கொண்டவர்களாக உள்ளனர். எவ்வாறாயினும், தார்மீக அல்லது கலாசார வேறுபாடுகளிலும் பார்க்க குறித்த குழுக்களின் அனுபவங்கள், அவர்கள் எதிர்நோக்கும் அழுத்தங்கள் என்பவற்றுடன் சம்பந்தப்பட்டதாக இது உள்ளது.

ஏதாவது ஒரு சந்தர்ப்பத்திலேனும் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு இலங்கையின் பெரும்பான்மையான இளைஞர்கள் விருப்பம் கொண்டுள்ளனர். உதவியின்மையுடன் தொடர்புடைய அச்சம் மற்றும் உணர்வு என்பவற்றினால் இந்த ஆர்வம் கட்டுப்படுத்தப்படுகின்றது. மிகவும் முக்கியமான சவால்களாக இவையே உள்ளன. எனவே, இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்படுமாயின் மற்றும் நேர்மையுடன் வாழ்வதற்கு அவர்களுடைய முயற்சிக்கு ஆதரவளிக்கப்படுமாயின், இலங்கை இளைஞர்களின் நேர்மைத்திறன் தொடர்பான எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்பது நிச்சயமானது.

இந்த இலக்கை மனதில் இருத்தியதாக, YISஇன் முடிவுகளின் அடிப்படையில் பின்வரும் பரிந்துரைகளை TISL முன்வைக்கின்றது.

- YISஇனால் எழுப்பப்பட்ட புதிய மற்றும் முக்கியமான கேள்விகளுக்கு பதிலளிக்கக் கூடிய வகையில், ஊழல் மற்றும் நேர்மைத்திறன் தொடர்பில் மேலதிக ஆய்வினை பூர்த்தி செய்தல்.
- ஊழலுக்கு எதிரான அறிவுறுத்தல் மற்றும் கல்விசார்ந்த ஆவணங்களுக்கான அணுகும் வசதியின் தரத்தை மேம்படுத்தலுக்கு, தனிப்பட்ட ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்களுடன் இணைந்து பணியாற்றல்.
- பாடசாலை நேரத்திற்குப் பின்னரான நிகழ்ச்சிகளின் ஊடாக ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் உண்மையான தலைவர்களாக மாறுவதற்கான சந்தர்ப்பத்தை இளைஞர்களுக்கு வழங்குவதற்கு TISL இளைஞர் நிகழ்ச்சியை பயன்படுத்தல்.
- ஊழலுக்கு எதிராக போராடுவதற்கான இளைஞர்களின் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கும், அவர்கள் ஊழலுக்கு எதிராக போராடும் போது ஆதரவு வழங்குவதற்கும், புத்தாக்கம் மிக்க சமூக ஊடகங்களையும், ஊழலுக்கு எதிரான உதவி தொலைபேசி சேவையையும் பயன்படுத்துவதன் மூலம், இளைஞர்களுடன் ஒன்றிணைந்து செயற்படல்.
- இலங்கை இளைஞர்கள் வழமையான அடிப்படையில் எதிர்கொள்ளும் நேர்மைத்திறனுடன் சம்பந்தப்பட்ட சவால்கள் தொடர்பில் கவனம் செலுத்தும், நேர்மைத்திறனின் அர்த்தமுள்ள விழுமியங்களை மேம்படுத்துவதற்கு ஊடக பிரசாரம் ஒன்றை ஆரம்பித்தல்.
- பொது விருதுகள் மற்றும் இளைஞர் தலைவர்களுக்கான ஊக்கமளித்தல் நிகழ்ச்சியின் உருவாக்கம் என்பவற்றின் ஊடாக இளைஞர்களை முன்மாதிரிகளாக முன்வைத்தல்.
- ஊழல் செயற்பாடுகளை புறக்கணிப்பதற்கு, ஊழல் நிபந்தனைகளை குறைப்பதற்கு மற்றும் பொலிஸார், பொது அதிகாரிகள் மத்தியில் நேர்மைத்திறனை வலுப்படுத்துவதற்கு புதிய உபாயங்களை உருவாக்குவதற்கு இளைஞர்களுடன் இணைந்து பணியாற்றல்.

# அறிமுகம்

YISஇன் குறிக்கோள்கள்:

**இலங்கையில் இளைஞர்களின் தற்போதைய நேர்மைத்திறன் மட்டங்கள் தொடர்பான அடிப்படையை உருவாக்கல்.**

**ஊழல் மற்றும் நேர்மைத்திறனின் வன்முறைகளுக்கு எதிராக இளைஞர்களின் அர்ப்பணிப்பு அளவை தீர்மானித்தல்.**

பயங்கரமான இறந்தகாலம் மற்றும் நம்பிக்கை தரும் எதிர்காலம் ஆகிய இரண்டின் அடிப்படையிலும் இலங்கை துரிதமாக விருத்தியடைந்து வருகின்றது.[1]

நீண்ட நாட்கள் நீடித்த யுத்தத்தில் இருந்தும், இனப்பிரச்சினைகளில் இருந்தும் இலங்கை மெதுவாக மீட்சி பெற்று வருகின்றது. முழுமையான ஜனநாயக முறையை மீளஸ்தாபிப்பதற்கும், மனித உரிமைகளுக்கான உலகளாவிய பாதுகாப்புக்காகவும், இலங்கை தற்போது பணியாற்றி வருகின்றது. இந்த இலக்குகளை எட்டுவதற்கு நேர்மைத்திறன் சார்ந்த சமூகமே அடிப்படையானது என்பதில் டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) உறுதியாக உள்ளது.

நேர்மைத்திறன் நிறைந்த சமூகம் ஒன்றை கட்டியெழுப்புவதற்கு, தேசத்தின் இளைஞர்கள் மத்தியில் உறுதியான விழுமியங்களையும், தனிப்பட்ட அர்ப்பணிப்புக்களையும் உருவாக்க வேண்டியது அவசியமாகும். விழுமியங்கள் மற்றும் அர்ப்பணிப்புக்கள் நிறைந்த இந்த அஸ்திவாரத்தை அமைப்பதற்கான முழுமையான செயற்பாடு ஒன்றின் முதல் கட்டமாக இந்த ஆய்வு அமைந்துள்ளது. இந்த இலக்கை நோக்கியதாக டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் செயலகம் மற்றும் தேசிய டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் அத்தியாயங்களான ∴பிஜி, இந்தோனேஷியா மற்றும் தென்கொரியாவுடன் இணைந்து TISL பணியாற்றி வருகினறது.

நேர்மைத்திறன் என்ற எண்ணக்கருவை இளைஞர்கள் எவ்வாறு புரிந்து கொண்டுள்ளனர் என்பது தொடர்பில் YIS கவனம் செலுத்தியது:- அவர்களது விழிப்புணர்வு, ஊழல் சார்ந்த சூழ்நிலைகளில் அவர்களது எண்ணம், அவர்களது உளப்பாங்கு, நடத்தைகள் மற்றும் ஊழலை எதிர்கொள்ளும் போதான செயற்பாடுகளும், இளைஞர்களின் விழுமியங்கள் மற்றும் நடத்தைகளை வடிவமைப்பதில் அதிக செல்வாக்கு செலுத்தும் முக்கியமான அம்சங்களாகும்.

TIஇற்கு அமைய (Transparency International Plain Guide Language, 2009)“ஒழுங்குசார் மற்றும் தார்மீக கோட்பாடுகள் மற்றும் நியமங்களின் தொடர்ச்சியாக, ஊழலுக்கு எதிரான தடைகளை ஏற்படுத்தும் தனிநபர்களாலும், நிறுவனங்களாலும் தழுவப்பட்ட நடத்தைகள் மற்றும் செயற்பாடுகள்” என இந்த ஆய்வின் நோக்கத்திற்காக நேர்மைத்திறன் என்பது விளக்கப்பட்டது. 15 வயதுக்கும் 30 வயதுக்கும் இடைப்பட்ட ‘இளைஞர்களை’ இந்த ஆய்வு இலக்கு வைத்தது.


Youth for Integrity

# முறையியல்

2011ஆம் ஆண்டு டிவார்ட்ஸ் டிரான்ஸ்பெரன்சி வியட்நாமினால் முன்னெடுக்கப்பட்டு வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்ட இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வின் அடிப்படையிலேயே TISLஇனால் இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வு முன்னெடுக்கப்பட்டது. 2012ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம், டுவார்ட்ஸ் டிரான்ஸ்பெரன்சி வியட்நாம், டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் செயலகம், ∴பிஜி, இந்தோனேஷியா மற்றும் தென்கொரியா தேசிய அத்தியாயங்களைச் சேர்ந்தவர்கள் இலங்கையின் நீர்கொழும்பில் சந்தித்து, இந்த ஆய்வின் நடைமுறைப்படுத்தல் குறித்து திட்டமிட்டனர். வியட்நாம் மற்றும் TIசெயலகத்தின் பிரதிநிதிகளின் அனுபவங்களில் இருந்து ஆய்வுக்கான பரப்பெல்லை கலந்துரையாடப்பட்டு, உள்ளூர் சூழ்நிலைக்கு ஏற்ற வகையிலான மூலோபாயங்கள் அடையாளம் காணப்பட்டன. அனைத்து தேசிய அத்தியாயங்களுக்கு இடையிலும் இளைஞர் நேர்மைத்திறன் ஆய்வில் சில வேறுபாடுகள் இருக்கின்ற போதிலும், கீழே தரப்பட்டுள்ள பகிரப்பட்ட கட்டமைப்பானது, தேசிய அத்தியாயங்களுக்கு இடையிலான ஒத்துழைப்பு மற்றும் ஒப்பீடுக்கு துணை புரியும். ஏனெனில், இளைஞர் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கும், ஊழலுக்கு எதிராக போராடுவதற்கும் நாம் அனைவரும் இணைந்து செயற்பட்டு வருகின்றோம்.

சர்வதேச புள்ளிவிபரவியல் தரங்களைத் தொடர்ந்து, இலங்கையின் அனைத்து ஒன்பது மாகாணங்களில் தெரிவு செய்யப்பட்ட பல்கட்ட மாதிரி வடிவமைப்பினை YIS பயன்படுத்தியது. இலங்கை மக்கள் தொகை அடர்த்தி மற்றும் இனக்குழும புள்ளிவிபரங்கள் தொடர்பான பகுப்பாய்வின் ஊடாக, ஒவ்வொரு மாகாணத்தில் இருந்தும் மாவட்டங்கள் தெரிவு செய்யப்படும் வகையில் அதிக சனத்தொகை கொண்ட 8 மாவட்டங்களும், பல்லினம் வாழும் மாவட்டமும் ஆய்வு மாதிரிக்காக தெரிவு செய்யப்பட்டன. மேல் மாகாணத்தில், நாட்டின் சனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்கினை உள்ளடக்கிய, தலைநகரமான கொழும்பு உள்ளடங்கலாக, அதிக சனத்தொகை கொண்ட இரண்டு மாவட்டங்கள் தெரிவு செய்யப்பட்டன.

இதனால், 11 நகர்ப்புற மற்றும் 11 கிராமப்புற பிரிவுகள் (பிரதேச செயலகப் பிரிவுகள்) ஒவ்வொரு மாவட்டத்திலும் தெரிவு செய்யப்பட்டன. இந்த மாதிரியில் இருந்து தெரிவு செய்யப்பட்ட பிரிவுகளின் வடக்கு, கிழக்கு, மேற்கு மற்றும் மத்திய பகுதிகளை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தோராயமாக 10 நகர்ப்புற மற்றும் கிராமப்புற பகுதிகள் (கிராம சேவகர் பிரிவுகள்) தெரிவு செய்யப்பட்டன. இறுதியாக, இலங்கை சனத்தொகை மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்ட கிராம சேவகர் பிரிவுகளுக்கான வீட்டு விபர பட்டியலில் இருந்து இலக்கு குழு (இளைஞர்) மற்றும் கட்டுப்பாட்டு குழு (வயதானவர்கள்) பதிலளிப்பவர்கள் தெரிவு செய்யப்பட்டன.[2] இறுதியில், இலங்கை தேசிய இளைஞர் சேவைகள் பேரவையின் உறுப்பினர்கள் நேருக்கு நேரான நேர்காணல்களை 1,004 இளைஞர்களுடனும், 1012 வயதானவர்களிடமும் மேற்கொண்டனர்.

## அ. வினாக்கொத்து வடிவமைப்பு

செயற்றிட்டத்தில் பங்குபற்றிய அனைத்து நான்கு நாடுகளிலும் YISஇற்கான கட்டமைக்கப்பட்ட நேர்காணல் வினாக்கொத்து முழுமையாக உறுதி செய்யப்பட்டது. பின்வரும் நான்கு தலைப்புக்களையும் உள்ளடக்கியுள்ளதா என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

- ஒழுங்குகள் மற்றும் நெறி- நடத்தையின் தரங்கள் குறித்த கருத்துசார் புரிந்துணர்வு
- கோட்பாடுகள் - எது சரி மற்றும் எது பிழை என்பவற்றுக்கு இடையில் வேறுபடுத்தக் கூடிய இயலுமை
- விதிகளை மதித்தல் - சமூகத்தினால் உருவாக்கப்பட்ட சட்ட கட்டமைப்புக்கு ஏற்ப ஒழுகும் தன்மை
- ஊழலை எதிர்த்தல் - ஊழல் செயற்பாடுகளை சவாலுக்கு உட்படுத்தும் ஆற்றல்

பதிலளிப்பவர்களுடன் நேருக்கு நேரான நேர்காணல்களின் மூலம் பெறப்பட்ட தரவுகளில் இருந்து, இளைஞர் நேர்மைத்திறனிற்கான மூன்று பரப்பெல்லைகள் அடையாளம் காணப்பட்டு, இந்த அறிக்கையில் ஆழமாக பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன:

### அ. 1 நேர்மைத்திறனை நோக்கியதாக இளைஞர்களின் மதிப்புக்களும், உளப்பாங்குகளும்

இளைஞர்கள் ஊழலை எவ்வாறு பார்க்கின்றனர் என்பதனை அளவிடுவதற்கு கற்கையின் இந்த பகுதி முயற்சிக்கின்றது. நேர்மைத்திறனை கொண்டிருத்தல், பணம் ஈட்டல், விதிகளை பின்பற்றல் என்பவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் ஒப்பீடு செய்யுமாறு பதிலளித்தவர்களிடம் வினவப்பட்டது. ஏனையோர் மீதான நேர்மைத்திறன் தொடர்பில் பதிலளிப்பவர்களுக்கு உள்ள மதிப்பு தொடர்பில் கவனம் செலுத்துமாறும், அவர்களுடைய உலகம் சார்ந்த பார்வையில் நேர்மைத்திறனுக்கான மதிப்பு ஒன்றினை உருவாக்குமாறும் அவர்கள் கோரப்பட்டனர்.

### அ. 2 இளைஞர் அனுபவங்களும், நடத்தைகளும்

ஊழல் தொடர்பில் பதிலளித்தவர்களின் உண்மையான அனுபவங்கள் மற்றும் அவர்கள் எவ்வாறு அதனை எதிர்கொள்கின்றனர் என்பதனை கண்டறிவதற்கு கற்கையின் இந்த பகுதி முயற்சி செய்தது. ஊழல் குறித்த பதிலளிப்பவர்களின் சகிப்புத் தன்மை குறித்த முக்கியப் பகுதிகளை அடையாளம் காண்பதற்கு இந்த கேள்விகள் முயற்சி செய்தன. பொது துறையில் காணப்படும் ஊழல் இலங்கையில் மிகவும் முக்கியமான அக்கறையாக குறிப்பிடப்பட்டன. இதனால்,இந்த பரப்பெல்லைக்குள் பல்வேறு பொது சேவை வழங்குனர்கள் மத்தியில் ஊழல் குறித்த தமது எண்ணக்கருக்களை குறிப்பிடுமாறு பதிலளிப்பவர்களிடம் கேட்கப்பட்டது.

### அ. 3 சுற்றுச் சூழல்: செல்வாக்கு மற்றும் நடவடிக்கை

ஊழல் குறித்து இளைஞர்கள் எங்கு கற்று கொள்கின்றனர் மற்றும் இலங்கையில் உள்ள ஊழல் விதிகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பில் எவ்வளவு அறிந்து வைத்துள்ளனர் என்பன தொடர்பில் கற்கையில் இந்த பகுதி கேட்டது. மேலதிகமாக நேர்மைத்திறனை மேம்படுத்தல் தொடர்பில் அவர்களுடைய வகிபாகம் மற்றும் தமது சமுதாயங்களில் ஊழல் ஏற்படுவதற்கு காரணமான புறக்காரணிகளை கண்டறிதல் தொடர்பில் பதலளித்தவர்களின் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. இலங்கையில் மாற்றத்திற்கு இளைஞர்கள் எவ்வளவு தயாராக இருக்கின்றார்கள் என்பதனை தீர்மானிப்பதும், அதற்கு தடையான காரணிகளை அடையாளம் காண்பதுமே இந்த பிரிவின் இலக்காக அமைந்திருந்தது.

இந்த செயற்றிட்டத்தில் பங்குபற்றும் ஏனைய டிரான்ஸ்பெரன்சி கிளைகளினால் முன்னெடுக்கப்பட்ட ஆய்வின் கேள்விகளை உள்ளடக்கியதாக இருந்தன. எவ்வாறாயினும், இலங்கையில் இளைஞர்களை புரிந்துகொள்வதற்கு மற்றும் நேர்மைத்திறன் என்பவற்றிற்கு இந்த ஆய்வு அர்த்தமுள்ள பங்களிப்பினை வழங்குவதனை உறுதி செய்வதற்கு, பதிலளிப்பவர்களின் சமூக-சனத்தொகை சிறப்பியல்புகளைப் பயன்படுத்தி மேலதிக தரவுகள் உருவாக்கப்பட்டன. மிகவும் முக்கியமாக, பால்நிலை வேறுபாடுகள் மற்றும் நகர்ப்புற, கிராமப்புற வேறுபாடு ஆகிய இலங்கை சமூகத்தின் இரண்டு முக்கியமான இயல்புகளை இந்த ஆய்வு சுட்டிக்காட்டுகின்றது. கிராமப்புறம் மற்றும் நகர்ப்புற சனத்தொகைக்கு இடையில் இலங்கையில் தெளிவான இடைவெளி ஒன்று காணப்படுகின்றது. எனவே, இந்த தரவுகளை பிரித்தறிய வேண்டியது மிகவும் முக்கியமாகும்.[3] பால்நிலையும், நகர்ப்புற/கிராமப்புற பிரிவுகளும் குறிப்பிடத்தக்க வேறுபாட்டினை பதிலளிப்பவர்களிடம் ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்பட்டது. இந்த வேறுபாடுகள் கீழ்வரும் பகுதிகளில் விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

## ஆ. களச் செயற்பாடு

தேசிய இளைஞர் சேவைகள் பேரவையைச் சேர்ந்த இளைஞர் தன்னார்வ ஊழியர்களுடனான ஒத்துழைப்புடன், TISL ஊழியர்களினால் இந்த செயற்றிட்டத்திற்கான களச் செயற்பாடு முன்னெடுக்கப்பட்டது. இலங்கை தேசிய இளைஞர்கள் சேவை பேரவையைச் சேர்ந்த இளைஞர் கழகத் தலைவர்கள் கள ஆய்வாளர்களாகவும், மேற்பார்வையாளர்களாகவும் நியமிக்கப்பட்டிருந்தனர். மொத்தமாக ஒன்பது மாகாணங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பதிலளிப்பவர்கள் ஆய்வில் பங்குபற்றியிருந்தனர்.




உரு ஆ. 1 இலங்கையின் அனைத்து மாகாணங்களையும் உள்ளடக்கும் வகையில், பத்து மாவட்டங்களில் இருந்து தோராயமாக தெரிவு செய்யப்பட்ட 1004 இளைஞர்கள் மற்றும் 1012 வயதானவர்கள்



## நேர்மைத்திறன்

“ஊழலுக்கு தடை ஏற்படுத்தும் தனிநபர்கள் மற்றும் நிறுவனங்களால் உள்வாங்கப்பட்ட ஒரு தொகுதி தார்மீக மற்றும் ஒழுங்குசார் கோட்பாடுகள் மற்றும் நியமங்களுடனான உளப்பாங்கும், நடத்தைகளும்”

(Transparency International Plain Guide Language, 2009)



# பிரதான முடிவுகள்

## அ. நேர்மைத்திறனை நோக்கியதாக இளைஞர்களின் மதிப்புக்களும், உளப்பாங்குகளும்

இலங்கையில் இளைஞர்களின் நேர்மைத்திறன் மற்றும் ஊழல் தொடர்பான எண்ணக்கருக்கள், மதிப்புக்கள் மற்றும் உளப்பாங்குகளை பகுப்பாய்வு செய்வதே இந்த கற்கையின் அடிப்படையாகும். இளைஞர்களிடம் உள்ள இந்த பிரதான விடயங்கள் குறித்த எண்ணங்களை அறிந்து கொள்வதன் மூலம், இலங்கை இளைஞர்களின் கலாசாரம் குறித்த உள்ளடக்கத்தை புரிந்து கொள்வதும், சமூக மாற்றத்திற்கான சாத்தியமான வழிகளையும் கண்டறிவது இலகுவாகும். நேர்மைத்திறன் தொடர்பான சாதகமான முக்கியத்துவம், எத்தனை அளவிற்கு நேர்மைத்திறன் சார்ந்த செயற்பாடுகள் விரும்பத்தக்கது, மற்றும் அதிக நேர்மையுடன் உள்ளவர்களை சகபாடிகள் எவ்வாறு பார்க்கின்றனர் என்பது தொடர்பான கேள்விகளின் ஊடாக, இளைஞர்கள் மத்தியில் நேர்மைத்திறனின் வகிபாகம் மற்றும் நிலைமை குறித்த உள்ளடக்கத்தை ஆய்வு பெற்றுக் கொண்டது.

### அ. 1 நேர்மைத்திறனின் முக்கியத்துவம் குறித்த எண்ணக்கரு

இளைஞர்களுக்கு நேர்மைத்திறனின் முக்கியத்துவம் என்பது, இலங்கையில் சாதகமான சமூக மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான மிகவும் முக்கியமான அம்சமாகும். (1) இளைஞர்கள், (2) அவர்களுடைய குடும்பம் மற்றும் நண்பர்கள், (3) தொழில் மற்றும் பொருளாதார நடவடிக்கைகள் (4) நாட்டின் அபிவிருத்தி, போன்ற தெரிவு செய்யப்பட்ட இலக்குப் பகுதிகளில் பிரதான பிரச்சினையாக நேர்மைத்திறன் இன்மை (ஊழல் உள்ளடங்கலாக) என்பதனை காண்கின்றார்களா போன்ற கேள்விகளை பதிலளிப்பவர்களிடம் இருந்து ஆய்வின் இந்த பகுதி வினவியது.

முடிவுகளின் அடிப்படையில், இலக்கு வைக்கப்பட்ட பகுதிகளில் நேர்மைத்திறன் இன்மையே பிரதான பிரச்சினை என பெரும்பாலான இளைஞர்கள் (84%) கருதினர். ஏனையோருடைய வாழ்க்கையிலும் பார்க்க (88%) தமது வாழ்க்கையிலேயே அது அதிக தாக்கத்தை கொண்டிருப்பதாக (84-86%) அவர்கள் கருதினர்.

தமது தனிப்பட்ட வாழ்க்கையிலும், தமது குடும்பங்களுக்கும், பொருளாதார வழியிலும், நாடு முழுமைக்கும் நேர்மைத்திறன் என்பது முக்கியமானது என்பது தொடர்பில் இலங்கை இளைஞர்கள் அறிந்து வைத்துள்ளனர் என்பதனை இந்த முடிவுகள் வெளிப்படுத்துகின்றன.




உரு அ. 1-1: நேர்மைத்திறன் இன்மை ஒரு பாரிய பிரச்சினையாக

பால்நிலை மற்றும் நகர்ப்புற / கிராமப்புற சனத்தொகை என்பதன் அடிப்படையில் தரவுகள் பிரிக்கப்பட்ட போது, அதேபோன்ற முடிவுகள் எட்டப்பட்டன.




உரு அ. 1-2: நேர்மைத்திறன் இன்மை ஒரு பாரிய பிரச்சினையாக: ஆண்கள் எதிர் பெண்கள்

நேர்மைத்திறன் முக்கியத்துவம் தொடர்பில் பால்நிலைசார் கருத்துக்களில் சிறிதளவு வேறுபாடுகள் இருக்கின்ற நிலையில், இலங்கை இளைஞர்கள் மத்தியில் நேர்மைத்திறன் குறித்த உறுதியான அத்திவாரம் உள்ளமை வெளிப்படையாகும். நாட்டில் நேர்மைத்திறனையும், ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளையும் மேம்படுத்தவதற்கான முயற்சிகளுக்கு இந்த அத்திவாரத்தை பயன்படுத்திக் கொள்ளலாம்.

கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு இடையிலான வேறுபாடுகளே மிகவும் ஆச்சரியமளிக்கும் விடயமாக இருந்தது. இலக்குப் பகுதிகளில், கிராமப்புற இளைஞர்கள் அண்ணளவாக 5%ஆனோர், நேர்மைத்திறன் இன்மை ஒரு பாரிய பிரச்சினை என்ற கருத்தை வெளியிடுவதற்கு விருப்பம் கொண்டிருந்தனர். கீழே நாம் கலந்துரையாடப் போகும் விடயங்களுடன் இது மிகவும் வேறுபட்டதாக இருக்கும். அதாவது, கிராமப்புற இளைஞர்கள் அதிகளவில் ஊழலை ஏற்றுக் கொள்பவர்களாக இருக்கின்றனர்.

வயதானவர்கள் மற்றும் இளைஞர்கள் உள்ளடங்கலாக பதிலளித்தவர்கள் அனைவரிலும் பெரும்பாலானவர்கள், (80%இற்கு அதிகம்) நேர்மைத்திறன் என்பது மிகவும் முக்கியப் பிரச்சினை எனக் கருதினர். எவ்வாறாயினும், தமது கிராமப்புற சகாக்களிலும், நேர்மைத்திறன் மீறப்படல் மற்றும் ஊழல் தொடர்பில் அதிக கூருணர்வு மிக்கவர்களாக நகர்ப்புற இளைஞர்கள் உள்ளனர் என கிராமப்புற மற்றும் நகர்ப்புற இளைஞர்களுக்கு இடையிலான முக்கியமான வேறுபாடு குறிக்கின்றது.




உரு அ. 1-3: நேர்மைத்திறன் இன்மை பாரிய பிரச்சினையாக: நகர்ப்புறம் எதிர் கிராமப்புறம்

நேர்மைத்திறன் இன்மை பாரிய பிரச்சினை என இலங்கையைச் சேர்ந்த அனைத்து இளைஞர்களும் உணருகின்ற போதிலும், நேர்மைத்திறன் என்றால் அவர்கள் எவ்வாறு புரிந்து கொண்டுள்ளனர் என்பதனை அறிந்து கொள்ளாத வரை, அதனை புரிந்து கொள்வது கடினம். நேர்மைத்திறன் குறித்த மூன்று வரைவிலக்கணங்களை ஆய்வு முன்வைத்தது. அந்த வரைவிலக்கணங்கள் தொடர்பில் அவர்களது இணக்கத்தை கேட்டறிந்தது.

i. பொய் சொல்லாது இருத்தல் / ஏமாற்றாது இருத்தல், எனவே மக்கள் அவர்களை நம்பலாம்
ii. எந்தவொரு சந்தர்ப்பத்திலும் சட்டத்தை மீறாது இருத்தல்
iii. இலஞ்சம் பெற்றுக் கொள்ளாது / வழங்காது இருத்தல்




உரு அ. 1-4: ஒருபோதும் பொய் சொல்லாது, யாரையும் ஏமாற்றாது இருப்பவர்கள் நேர்மைத்திறன் கொண்டவர்கள்




உரு அ. 1-5: சட்டத்தை மீறாத நபர் நேர்மைத்திறன் மிக்க நபர்

மேலே தரப்பட்ட இரண்டு உருக்களும், சட்டத்தை மீறுவதனை விட, பொய் பேசுதலையும், ஏமாற்றுதலையும் நேர்மைத்திறனை மீறுவதாக இலங்கை இளைஞர்கள் கருதுகின்றனர் என்ற நிலைப்பாட்டை வெளிப்படுத்துகின்றன. நிரூபிப்பதற்கு இந்த வேறுபாடு போதுமானது அல்ல. அது முக்கியமானதாக இருப்பதுடன், அண்ணளவாக 22%ஆன இளைஞர்கள் மற்றும் 20%ஆன வயதானவர்கள் மத்தியில் சட்டத்தின் மீதான பொதுவான நம்பிக்கையின்மையை இது குறிக்கின்றது. அதேவேளை, ஏமாற்றுதலும், பொய் கூறுதலும் நேர்மைத்திறனை மீறும் செயல் அல்ல என 15%இற்கும் அதிகமானவர்கள் கருதுகின்றனர் என்பதும் முக்கியமானது.




உரு அ. 1-6: ஊழலில் அங்கம் வகிக்காத ஒருவர் நேர்மைத்திறன் மிக்கவர்.

சட்டத்தை மீறுவதிலும் பார்க்க, ஊழல் என்பதனை பாரிய நேர்மைத்திறன் மீறல் என பெரும்பாலான இலங்கை இளைஞர்கள் கருதுகின்றனர். அதேவேளை, வயதானவர்களிலும் ஓரளவு அதிகமான இளைஞர்கள் ஊழலை நேர்மைத்திறன் மீறும் செயலாக கருதுகின்றனர் என்பது முக்கியமானது. எவ்வாறாயினும், ஊழலில் ஈடுபடுவது என்பது நேர்மைத்திறன் மீறல் அல்ல என 14%ஆன இளைஞர்கள் கருதுகின்றனர்.

## அ. 2 விழுமியங்கள்

இலங்கை இளைஞர்கள் நேர்மைத்திறனை மதிக்கும் அதேவேளை, பெரும்பாலானோர் ஊழல், பொய் பேசுதல், ஏமாற்றுதல் மற்றும் சட்டத்தை மீறல் என்பவற்றை நேர்மைத்திறன் மீறலாக பார்க்கின்றனர். இந்த நம்பிக்கைகள் தொடர்பில் அவர்கள் கொண்டுள்ள தனிப்பட்ட கருத்துக்களையும் அறிந்து கொள்ள வேண்டியது முக்கியமாகும். இந்த விழுமியத்தை அளவிடுவதற்கு, குடும்ப வருமானத்தை ஈட்டுதல் தொடர்பில் நேர்மைத்திறனின் முக்கியத்துவம் தொடர்பில் ஒப்பிடும் பல கேள்விகள் பதிலளித்தவர்களிடம் கேட்கப்பட்டன. விசேடமாக வினாக்கொத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த கேள்விகள்:

1. செல்வந்தராக இருப்பதே மிகவும் முக்கியமானது. இந்த குறிக்கோளை எட்டுவதற்கு பொய் கூறல் அல்லது ஏமாற்றுதல், சில விதிகளை புறக்கணித்தல் மற்றும் அதிகார துஷ்பிரயோகம் என்பன ஏற்றுக் கொள்ளக் கூடியது.
2. நேர்மையாக இருப்பதிலும் பார்க்க செல்வந்தராக இருப்பது மிகவும் முக்கியமானது
3. செல்வந்தராக இருப்பதிலும் பார்க்க நேர்மையாக இருப்பது ஓரளவு முக்கியமானது
4. செல்வந்தராக இருப்பதிலும் பார்க்க நேர்மையாக இருப்பது மிகவும் முக்கியமானது.

நேர்மைத்திறன் என்பதே முக்கியமான விழுமியம் என பெரும்பான்மையான இலங்கை இளைஞர்கள் கருதுவதாக இந்த அறிக்கை வெளிப்படுத்தும் அதேவேளை, அதே எண்ணிக்கையிலான இளைஞர்கள் நேர்மைத்திறனும், செல்வந்தராக இருப்பதும் மிகவும் முக்கியமான இரண்டு விழுமியங்கள் என்ற கருத்தைக் கொண்டுள்ளதாக தெரிவிக்கின்றது. 3%ஆன இளைஞர்கள் மாத்திரமே செல்வந்தராக இருப்பது மிகவும் முக்கியமானது என கருதுகின்றமையே நம்பிக்கையளிப்பதாக உள்ளது.[4]




உரு அ. 2-1: ஒருவர் ஊழலில் ஈடுபடாது இருக்கும் போது அவர் நேர்மைத்திறன் மிக்கவராக இருக்கின்றார்.

தரவுகள் பால்நிலை அடிப்படையில் பிரிக்கப்பட்ட போது, இளம் பெண்கள் நேர்மைத்திறன் தொடர்பில் அதிக மதிப்பினையும், செல்வந்தராக இருப்பதில் குறைந்தளவிலான மதிப்பினையும் கொண்டிருத்தலை கண்டுகொள்ளக் கூடியதாகவிருந்தது. இலங்கையில் சமூக மாற்றத்திற்கான வழிகாட்டுபவர்கள் என்ற நிலையில் பெண்கள் உள்ளமையை வெளிப்படுத்தும் ஏனைய ஆய்வு முடிவுகளின் எதிரொலியாக இது அமைந்திருந்தது. ஒட்டுமொத்தமாக, ஆண்கள் மற்றும் பெண்கள் என இருபாலாரும், அண்ணளவாக 1/3 பங்கு பதிலளித்தவர்கள், நேர்மைத்திறன் மிக முக்கியமாக இருக்கும் அதேவேளை, பணம் மற்றும் நேர்மைத்திறன் ஆகிய இரண்டும் முக்கியமான விழுமியங்கள் எனத் தெரிவித்தனர். பெரும்பாலான இலங்கை இளைஞர்கள் இந்த கேள்வியை நடைமுறைக்கு ஏற்றவாறு அணுகியமையை இது குறிக்கின்றது. எவ்வாறாயினும், நேர்மைத்திறன் தொடர்பான கோட்பாடுகள் மற்றும் விழுமியங்களில் இளைஞர்கள் எத்தனை அளவு உறுதியாக உள்ளனர் என்பது குறித்த கேள்விகளையும் இந்த முடிவுகள் எழுப்பாமலில்லை எழுப்புகின்றன.




உரு அ. 2-2: எது மிகவும் முக்கியமானது, வருமானத்தை அதிகரிப்பதா அல்லது நேர்மையாக இருப்பது மற்றும் சட்டத்தை மதிப்பதா?

சட்ட ஒழுங்கு தொடர்பான இளைஞர்களின் மதிப்புக்களையும் இந்த ஆய்வு வெளிப்படுத்தியது. இங்கு பெறப்பட்ட முடிவுகள் சிக்கலானவை. வயதானவர்களிலும் பார்க்க நேர்மையாக இருத்தல் மற்றும் சட்டத்தை பின்பற்றலில் இளைஞர்கள் ஆர்வம் குறைந்தவர்களாக இருப்பதாக உள்ளது. பால்நிலை பிரிவுகளிலும் இந்த வேறுபாடு உள்ளது. ஆண்களிலும் பார்க்க பெண்கள் வருமானத்தை விட நேர்மைத்திறன் தொடர்பில் அதிக முக்கியத்துவம் வழங்குகின்றனர்.

இளைஞர் மற்றும் வயதானவர்களின் பதில்களுக்கு இடையிலான வேறுபாடு குறுகியதாக (4-6%) இருக்கின்ற நிலையில், சட்ட ஒழுங்கு தொடர்பில் இளம் தலைமுறையினர் நம்பிக்கை குறைவாக உள்ளமையை இந்த முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இந்த முடிவுகளை பிரதிபலிக்கும் உருக்கள் 3. 1-4, 6, பொய் கூறல், ஏமாற்றுதல் அல்லது ஊழலிலும் பார்க்க சட்டத்தை மீறுவதில் இளைஞர்கள் குறைந்தளவு முக்கியத்துவம் செலுத்துவதினை அறிய முடிகின்றது. வயதானவர்களின் எண்ணிக்கையை விட இளைஞர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது.

## அ. 3 உளப்பாங்குகள்

நேர்மைத்திறனுடன் வாழ்க்கையை முன்னெடுப்பதில் அர்ப்பணிப்புடன் உள்ள இளைஞர்களும், குறித்த நேர்மைத்திறனை மீறுவதற்கான அழுத்தங்களை எதிர்கொள்ள நேரிடும். இந்தப் பிரிவில், நேர்மைத்திறனானது நிதி வெற்றிக்கு உதவுமாயின், நேர்மைத்திறனையும், நிதி வெற்றியையும் இலங்கை இளைஞர்கள் எவ்வாறு பார்க்கின்றார்கள் என்பதனை இந்த ஆய்வு அடையாளம் காட்டியது. நேர்மைத்திறனும், நிதி வெற்றியும் சிறந்த வர்த்தகம் என பார்க்கப்படுமாயின், தனிப்பட்ட நேர்மைத்திறனை பேணுவதற்கும், ஊழலுக்கு எதிராக போராடுவதற்குமான இயலுமையில் இளைஞர்களில் அது அழுத்தங்களை ஏற்படுத்தும்.




உரு அ. 3-1: ஏமாற்றுபவர்களிலும் பார்க்க நேர்மைத்திறனுடன் உள்ளவர்கள் வெற்றியடைவது அதிகமா?

இலங்கையில் உள்ள ஆண் மற்றும் பெண் இளைஞர்கள் என இருபாலாரிலும் அதிகமானவர்கள், நேர்மைத்திறனுடன் இருந்தால் வெற்றி பெறலாம் என நம்புகின்றனர். எவ்வாறாயினும், ஏமாற்றினால் மாத்திரமே வெற்றி பெறலாம் என அண்ணளவாக மூன்றில் ஒரு இளைஞர் கருதுகின்றனர். பதிலளித்த ஆண்களின் மத்தியிலேயே இந்த எண்ணம் அதிகம் காணப்படுகின்றது. இவர்களில் மூன்று பங்கினரும் ஏமாற்றுதலை வெற்றிக்கான குறுக்கு வழியாக காண்கின்றனர்.




உரு அ. 3-2: ஏமாற்றுபவர்களை விட நேர்மைத்திறன் உள்ளவர்கள் அதிகம் வெற்றி பெறுகின்றனரா? (கல்வி அடைவின் அடிப்படையில்)

கல்வி அடைவுகளின் அடிப்படையில் தரவுகளை பிரித்துப் பார்த்த போது மேலும் சிக்கலான முடிவுகள் பெறப்பட்டன. குறைந்தளவிலான கல்வி மட்டத்தை கொண்டிருப்பவர்களே வெற்றிக்கான சிறந்த வழியாக நேர்மையை கருதுகின்றனர். இதேவேளை, ஊழலும், நேர்மையீனமுமே வெற்றிக்கு வழிவகுக்கும் என மூன்றாம் நிலை கல்வியை நிறைவு செய்தவர்களில் மூன்றில் ஒரு பங்கினர் கருதுகின்றனர். பொருளாதார முறையை நன்கு அறிந்தவர்களே, வெற்றிக்கான பாதையாக ஊழலை காண்கின்றார்கள் என்ற பார்வையானது சிக்கலுக்கு உரியது. வெற்றி பெற்றவர்களும் அதே வகையான உணர்வை கொண்டுள்ளனர் என்ற கருத்தையும் இந்த ஆய்வு வெளிப்படுத்துகின்றது. வயதானவர்களிலும் இந்த முறையானது உண்மையாக உள்ளது. இதனால், வெற்றிக்கான பாதையாக ஊழலை தெரிந்தெடுக்கும் முறையானது அதிகரிப்பதற்கான சாத்தியம் உள்ளது. இந்த முறை தொடர்பில் எதிர்காலத்தில் ஆராயப்பட வேண்டிய தேவை உள்ளது.

## அ. 4 நேர்மைத்திறனை கைவிடுவதற்கான விருப்பம்

நேர்மைத்திறனுக்கான அர்ப்பணிப்பினை வெளிப்படுத்துவது எளிமையானது. எவ்வாறாயினும், அந்த நேர்மைத்திறன் சவாலுக்கு உட்படுத்தப்படும் போது, அந்த நேர்மைத்திறனை எத்தனை அளவு ஆழமாக அவர் கடைபிடிக்கின்றார் என்பதில் தங்கியுள்ளது. இந்த தகவலை அடையாளம் காண்பதற்கு, பொய் கூறுவதற்கு, ஏமாற்றுவதற்கு மற்றும் இலஞ்சம் வழங்குவதற்கு விருப்பம் உள்ளமை குறித்து அல்லது குடும்பத்தின் ஒருமைப்பாட்டிற்காக நேர்மைத்திறனை கைவிடுவதற்கு தெரிவு செய்யும் சந்தர்ப்பங்கள் குறித்து பதிலளித்தவர்களிடம் நேர்மைத்திறன் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்டது.




உரு அ. 4-1: அவ்வாறு செய்யாதிருப்பது பாதகமற்றது என்ற நிலையில்,பொய் கூறும் அல்லது ஏமாற்றும் நபர் ஒருவரின் உணரப்பட்ட நேர்மை




உரு அ. 4-2: சட்டத்தை மீறுவதற்கு குடும்பத்தின் ஐக்கியத்தினை காரணமாக சுட்டும் நபரின் உணரப்பட்ட நேர்மை

குடும்ப விழுமியங்கள் தொடர்பில் தமது நேர்மைத்திறனை அளவிடுமாறு பதிலளித்தவர்களிடம் கேட்ட போது, மிகவும் குறிப்பிடத்தக்க முடிவுகள் அதற்கு கிடைத்தன. ஒரு குறிப்பிட்ட சந்தர்ப்பத்தில் நபர் ஒருவர் பொய் கூறுவாராயின், ஏமாற்றுவாராயின், அல்லது சட்டத்தை அவமதிப்பாராயின், குறித்த நபர் நேர்மையானவரா என்ற கேள்வி எழுப்பப்பட்டது. பொய் கூறும் மற்றும் ஏமாற்றும் நபர்கள் நேர்மையானவர்கள் என 47% என இலங்கை இளைஞர்கள் தெரிவித்தனர். குடும்ப ஒருமைப்பாட்டிற்காக சட்டத்தை உடைக்கும் நபர்களும், நேர்மையானவர்கள் என பெரும்பாலான இளைஞர் (56%) தெரிவித்தனர்.




உரு அ. 4-3: பாதகம் பெயரளவிலானதாக மாத்திரம் இருக்கும் போது மாத்திரம் ஊழலில் ஈடுபடும் நபரின் நேர்மை

இறுதியாக, சிறிதளவிலான ஊழலை நேர்மைத்திறன் மீறல் என பெரும்பாலான இலங்கை இளைஞர்கள் கருதுவதில்லை. சிறிதளவான ஊழலிற்கு எதிராக கல்வி மற்றும் அறிவு தொடர்பில் உறுதியான முயற்சிகள் எடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளமையை இந்த முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. வயதானவர்களை விட இந்த விடயத்தில் இளைஞர்கள் அதிகளவு சௌகரியமாக உள்ளமையை குறிப்பிட வேண்டியது மிகவும் முக்கியமாகும். இது சிறிதளவு வேறுபாடேயாகும்.




உரு அ. 4-4: சட்டத்தை விட குடும்பத்தை உயர்ந்த நிலையில் வைக்கும் அல்லது பெயரளவிலான இலஞ்சங்களை வழங்கும் பொய் கூறும் / ஏமாற்றும், நபர்களின் உணரப்பட்ட நேர்மைத்திறன் தொடர்பில் நகர்ப்புற மற்றும் கிராமப்புற கருத்தாக்கங்கள்

நகர்ப்புற இளைஞர்களை விட நேர்மைத்திறன் தொடர்பில் கடுமையற்ற கருத்தை கொண்டுள்ள கிராமப்புற இளைஞர்கள் மத்தியிலேயே இந்த எண்ணம் உறுதியாக உள்ளது (அ.4-4). குடும்ப ஒருமைப்பாடு மற்றும் பெயரளவிலான இலஞ்சம் வழங்கல் போன்ற கேள்விகளை இது வழங்குகின்றது. இதற்கான காரணங்கள் சிக்கலானவை. நகர்ப்புற இளைஞர்களிலும் பார்க்க, கிராமப்புற இளைஞர்களே அதிகளவில் ஊழல் செயற்பாடுகளை எதிர்கொள்கின்றனர். அதன் காரணமாக அவர்கள் யதார்த்த வாழ்க்கையை முன்னெடுப்பதற்கு, விழுமியங்களுடன் சரிசெய்து செய்து கொண்டு வாழ நேர்கின்றது.[5] கல்விக்கான மற்றும் ஊடகத்திற்கான அதிகரித்த அணுகும் வசதியானது, நகர்ப்புற இளைஞர்கள் நேர்மைத்திறன் மீறலில் ஈடுபடும் அளவு குறைவாக இருப்பதற்கான காரணமாக இருக்கலாம்.

இலங்கை இளைஞர்கள் நேர்மைத்திறனை முக்கியமான கோட்பாடாக பார்க்கவில்லை என்பதனை இந்த முடிவுகள் விளக்குகின்றன. அத்துடன், நேர்மைத்திறனுக்கு ஆதரவளிப்பதற்கு அவர்கள் ஆர்வம் கொண்டுள்ளனர். ஆனால், தனிப்பட்ட நலன்கள் அல்லது குடும்ப உறவுகளுடன் சிக்கலாக அமையும் போது, நேர்மைத்திறன் மீறலை ஏற்றுக் கொள்வதற்கு அவர்கள் தயங்குவதில்லை. இலங்கை இளைஞர்களில் அரைப்பங்கினர், வருமானத்தை விட நேர்மைத்திறன் என்பது அடிப்படையாக முக்கியத்துவம் வாய்ந்து என கருதுவதில்லை என இந்த முடிவுகளில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது (அ.4-3,4).

தனித்து பார்க்கும் போது, குடும்ப ஒருமைப்பாடு மற்றும் செலவு தவிர்த்தலில் அவர்கள் உறுதியான மதிப்பினை கொண்டுள்ளதுடன், சிறிதளவு ஊழலில் தீவிரமாக இல்லாதிருப்பதனை முடிவுகள் சுட்டிக்காட்டுகின்றன. அதேவேளை, நேர்மைத்திறனின் பொதுவான புரிந்துணர்வு தொடர்பில் இவை கேள்விகளை எழுப்புமாயின், குடும்ப மதிப்புக்கள் மற்றும் செலவினை தவிர்த்தல் என்பன நேர்மைத்திறன் மற்றும் ஊழலுக்கு எதிரான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கு பயன்படுத்தக் கூடிய சக்தி மிக்க ஆயுதங்கள் எனவும் இந்த ஆய்வின் முடிவுகளில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

## ஆ. ஊழல் சார்ந்த அனுபவங்கள்

உலகம் முழுவதிலும் யதார்த்தமான விடயமாக ஊழல் உள்ளது. எவ்வாறாயினும், இளைஞர்கள் எத்தனை அளவு ஊழலில் ஈடுபடுகின்றார்கள் என்பது குறித்த அளவு, அவர்கள் நேர்மைத்திறனை எவ்வாறு காண்கின்றார்கள், ஆட்சிமுறை மீதான அவர்களது நம்பிக்கை, மற்றும் சமூகத்தில் மாற்றத்தை ஏற்படுத்துபவர்களாக மாறுவதற்கு அவர்களது ஆர்வம் என்பவற்றில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை கொண்டுள்ளன. இந்த விடயத்தை கண்டறிவதற்கு, கடந்த வருடத்தில் ஊழல் சார்ந்த தமது சொந்த அனுபவங்களை தெரிவிக்குமாறு பதிலளிப்பவர்களிடம் ஆய்வின் மூலம் கேள்வி எழுப்பப்பட்டது.

இளைஞர்கள் எதிர்கொள்ளக் கூடிய பல்வேறு வகையான ஊழல் உள்ளடங்கலாக, கேள்விகள் பல பிரிவுகளாக பிரிக்கப்பட்டன. பால்நிலை, வதிவிடம் மற்றும் கல்வி அடைவு என்பவற்றைப் பயன்படுத்தி மேலதிக பகுப்பாய்வும் பிரயோகிக்கப்பட்டன.




ஆ. 1: ஆறு பகுதிகளிலும் ஊழலுடன் சம்பந்தப்பட்ட இளைஞர் மற்றும் வயதானவர்களின் அனுபவங்கள்

ஊழல் பரிமாற்றங்களில் ஈடுபட்டுள்ள இளைஞர்களின் அளவு மிகவும் சிறியது என இந்த உருக்கள் வெளிப்படுத்துகின்றன. பொது நிர்வாகம் மற்றும் பொலிஸ் தொடர்பானதாவே பெரும்பாலான வன்முறைகள் காணப்பட்டன. இலங்கையில் பொது துறை ஊழல் என்பது முக்கியமான அக்கறையாக உள்ளமையை இந்த முடிவுகள் விளக்குகின்றன. கல்வி மற்றும் மருத்துவ சேவைகளுக்கான குறைந்தளவிலான ஊழல் என்பது நம்பிக்கையளிப்பதாக உள்ளது. நபர் ஒருவர் கல்வி பெறமுடியாதவாறு தடை செய்தல் மற்றும் சுகாதார பராமரிப்புக்கான அடிப்படை உரிமைகளை மீறல் ஆகிய இவை இரண்டுமே சமூகம் ஒன்றில் ஊழல் கடும் தாக்கம் செலுத்தும் பகுதிகளாகும். வயதானவர்கள் ஊழல் செயற்பாட்டில் ஈடுபடுவதில் ஆர்வமாக உள்ளார்கள் என மேலதிக முடிவுகள் தெரிவிக்கின்றன. இதுவே வயதானவர்களின் செயற்பாடாக இருக்கும் போது, பொருளாதார, சமூக முறைமை தெளிவற்றதாக உள்ளது. எவ்வாறாயினும், கல்வியை மேலும் தொடர்வதற்கு இந்த வேறுபாடு போதியதாக இல்லை.




உரு ஆ. 2: பால்நிலை அடிப்படையில் ஊழல் தொடர்பான இளைஞர் மற்றும் வயதானவர்களின் அனுபவங்கள் குறித்த ஒப்பீட்டு நோக்கு

பால்நிலை அடிப்படையில் ஊழல் தொடர்பான இளைஞர் மற்றும் வயதானவர்களின் அனுபவங்கள் குறித்த ஒப்பீட்டு நோக்கானது, ஊழல் தொடர்பான ஆண் மற்றும் பெண்களிற்கு இடையிலான வேறுபாடுகளை வெளிப்படுத்தின. பதிலளித்த பெண்களுடன் ஒப்பிட்ட போது, பதிலளித்த ஆண்கள் ஊழலில் ஈடுபடுவது சகஜமான ஒரு விடயமாக இருந்தது (ஆ.2). பொது துறை ஊழலுடன் ஒப்பிடும் போது, இந்த வேறுபாடுகள் மிகவும் முக்கியமானதாகும். அதேவேளை, தனியார் துறை ஊழலுக்கான நிர்ப்பந்தங்கள் ஒப்பிடக் கூடியது.

பொலிஸார் தொடர்பான ஊழலில் ஆண்கள் அதிளவில் சம்பந்தப்படுவதனை அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. கடந்த வருடத்தில் தம்மிடம் பொலிஸார் இலஞ்சம் கேட்டதாக நான்கில் ஒரு ஆண் இளைஞர்கள் தெரிவித்தனர். ஆவணங்கள் மற்றும் அனுமதிப் பத்திரங்களைப் பெறும் போது, ஐந்தில் ஒரு ஆண் இளைஞர்கள் ஊழலினால் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தனர். இலங்கை சமூகத்தில் பாரம்பரிய பால்நிலை வகிபாகங்களில் தாக்கம் ஏற்படுத்துபவையாக இந்த மாற்றங்கள் இருந்தன. ஏனெனில், ஆண்களே அதிகளவு வாகனம் செலுத்துவதன் மூலமும், பொதுச் செயற்பாடுகளின் மூலமும் பொலிஸார் மற்றும் அரசாங்க அதிகாரிகளுடன் அதிக தொடர்பு கொள்பவர்களாக உள்ளனர். இதன் மூலம் இளைஞர்களில் பெண்களை விட ஆண்களே அதிகளவு ஊழல் சார் அனுபவத்தைக் கொண்டுள்ளனர் என்ற முடிவை இந்த ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. இளைஞர்களில் பெண்களும் தற்போது சமத்துவத்தை வெளிப்படுத்தி வருவதனால், ஊழல் சார்ந்த அவர்களது செயற்பாடுகளும் அதிகரித்துக் கொண்டே இருக்கின்றன.

ஆச்சரியமளிக்கும் வகையில் கல்வியின் மட்டம் போன்ற சனத்தொகை காரணிகள், சிவில் சமூகங்களில் ஈடுபாடு மற்றும் வதிவிடம் என்பன புள்ளிவிபர ரீதியாக ஊழல் பரிமாற்றங்களின் அனுபவங்கள் தொடர்பில் எதுவிதமான ஆதிக்கத்தையும் வெளிப்படுத்தவில்லை.

## ஆ. 1 பொது நிறுவனங்களின் எண்ணக்கருக்கள்

இலங்கையின் பொது நிறுவனங்கள் எப்போதும் உயர்ந்த நிலையில் வைத்து மதிக்கப்படுவதில்லை. அவை பொதுவாக ஊழல் குற்றச்சாட்டுக்கு இலக்காகின்றன.[6] இதனால், பொது நிறுவனம் தொடர்பான இளைஞர்களின் கருத்துக்களை அறிந்து கொள்வதற்கு இந்த ஆய்வின் ஒரு அங்கத்தில் கவனம் செலுத்துவதற்கு TISL தீர்மானித்தது. பெரும்பாலானோருக்கு அவர்களுடைய அரசாங்க அங்கங்களுடனான தொடர்பு பொலிஸ், உள்ளூர் நிர்வாகிகள், தேசிய சுகாதார பராமரிப்பு வழங்குபவர்கள், கல்வி வழங்குபவர்கள் என்பவர்களில் ஆரம்பிக்கின்றது. இதனால், இந்த நிறுவனங்கள் தொடர்பான பொது மக்களின் கருத்தானது, அரசாங்கம் குறித்தும், சட்டம் தொடர்பில் அவர்கள் எவ்வாறான கருத்தை கொண்டுள்ளார்கள் என்பதனையும் வெளிப்படுத்தும்.




உரு ஆ. 1-1: பொது நிறுவனங்களின் ஒட்டுமொத்த செயற்பாடு குறித்த கருத்தாக்கங்கள்

தனியார் கல்வி, சுகாதாரம் மற்றும் தொழில் என அனைத்தும் நேர்மைத்திறன் தொடர்பில் உயர் தரப்படுத்தலை பெறும் அதேவேளை, ஒட்டுமொத்த அளவில் பொது துறை மோசமான அளவில் அமைந்திருந்தது. இளைஞர்கள் தனியார் நிறுவனங்களின் மீது நம்பிக்கை வைப்பதில் ஆர்வம் கொண்டவர்களாக உள்ளனர் என நேரடி ஒப்பீடு வெளிப்படுத்துகின்றது. அதேவேளை, அரச சுகாதார சேவை சராசரியான தரப்படுத்தலைப் பெற்றிருந்தது. மறுபுறத்தில், பதிலளித்தவர்களில் அரைப்பங்கினர் பொலிஸ் சேவையை 'மோசமானது' அல்லது 'மிக மோசமானது' என தரப்படுத்தினர். அரைப்பங்கிற்கும் மேற்பட்ட பதிலளித்தவர்களால் நம்பிக்கையற்றதாக கருதப்பட்ட ஒரே நிறுவனமாக பொலிஸ் நிலையம் உள்ளது. அதன் தொடர்ச்சியாக உள்ளூர் மற்றும் தேசிய நிர்வாக அங்கங்கள் காணப்படுகின்றன. இந்த அங்கங்கள் 'நன்று' அல்லது 'மிக நன்று' என்ற அடிப்படையில் இளைஞர்களால் பார்க்கப்பட்டிருந்தது.




1- மிக நன்று 2. ஓரளவு நன்று 3. ஓரளவு மோசம் 4. மோசம்

உரு ஆ. 1-2: பல்வகை பொது சேவை நிறுவனங்களின் உணரப்பட்ட நேர்மைத்திறன்

### ஆ. 2 ஊழலில் ஈடுபடுவதற்கான ஆர்வம்

'வழங்கப்பட்ட அதிகாரத்தை தனிப்பட்ட நலனுக்காக துஷ்பிரயோகம் செய்தல;' என ஊழல் என்பதனை டிரான்ஸ்பெரன்சி இன்டர்நெஷனல் விளக்குகின்றது (Transparency International Plain Guide Language, 2009). எவ்வாறாயினும், இலஞ்சம், உறவினர்களுக்கு சலுகை அளித்தல், கையாடல், சுரண்டல், விருப்பத்திற்கு ஏற்ற துஷ்பிரயோகம் மற்றும் ஏனையோர் தொடர்பில் பாரபட்சம் போன்ற பல்வேறு வடிவங்களிலும், அளவுகளிலும் ஊழல் இடம்பெறுகின்றது. ஊழலின் இந்த வடிவங்களில் பெரும்பாலானவை இரு தரப்புக்களைக் கொண்டவை. ஊழல் தொடர்பில் ஒரு தரப்பு புறக்கணித்தாலும், ஊழல் நிறைந்த மற்றைய அதிகாரியை தவிர்ப்பதன் மூலம் ஊழலை குறைக்க முடியும்.

எனவே, அறிக்கையின் இந்தப் பகுதியில், பல்வேறு வகையான ஊழல் பரிமாற்றங்களில் இலங்கையின் இளைஞர்கள் எந்தளவில் ஈடுபடுகின்றனர் என்பதனை TISL ஆராய்ந்தது. ஊழல் நிகழலாம் என கருதப்படும் நான்கு பகுதிகளை ஆய்வு சுட்டிக்காட்டியது (ஆ. 2-1). ஒழுங்கற்ற அல்லது ஊழல் சார்ந்த கோரிக்கைக்கு எவ்வாறு இளைஞர்கள் பிரதிபலிப்பார்கள் என பதிலளித்தவர்களிடம் வினவப்பட்டது. பின்வருவனவற்றில் எதற்காக:

1. முக்கியமான பரீட்சை ஒன்றில் தேறுவதற்கு
2. முக்கியமான ஆவணம் ஒன்றைப் பெறுவதற்கு
3. சிறந்த பாடசாலை அல்லது நிறுவனத்திற்குச் செல்வதற்கு
4. 'கனவுத் தொழில்' ஒன்றிற்கான நேர்காணலில் தேறுவதற்கு




உருஆ. 2-1: குறிப்பிட்ட பயனைப் பெறுவதற்கு ஊழல் செயற்பாட்டில் ஈடுபடுவதற்கான விருப்பம்

பிரதான முடிவுகள்

## ஆ. 3 முக்கியமான பரீட்சை ஒன்றில் தேறுதல்




உரு ஆ. 3-1: ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம்.

கல்வி சார்ந்த விடயங்களாக வரும் போது, பெரும்பாலான மாணவர்கள் ஏமாற்றுவதற்கான விருப்பம் இல்லாது இருக்கின்றமையை இந்த உருக்கள் வெளிப்படுத்துகின்றன. கல்வி அமைப்பில் மிகவும் சிறிதளவிலான மாணவர்களே உண்மையாக ஊழலில் ஈடுபட்டுள்ளனர் என்ற முடிவினை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது (ஆ. 3-1). கல்வி அமைப்பில் ஊழலில் ஈடுபட்ட மாணவர்களின் எண்ணிக்கையைப் பார்க்கும் போது, 'பரீட்சையில் தேறுவதற்கு எதனையும் செய்தல்' என்ற பிரிவின் கீழ் வருபவர்களின் எண்ணிக்கையுடன் சமமானதாக இருக்கின்றது. சந்தர்ப்பம் இருப்பதாக கருதும் சூழ்நிலைகளில் மாத்திரமே, மாணவர்கள் தமது ஆசிரியர்களுக்கு இலஞ்சம் வழங்குவதற்கு விருப்பத்தினை வெளிப்படுத்துகின்றனர். இந்த கேள்வி தொடர்பான மேலதிக ஆய்வு அவசியமாகும்.




உரு ஆ. 3-2: ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம், பால்நிலை அடிப்படையில்

கல்வி அமைப்பில் நேர்மைத்திறன் தொடர்பான அர்ப்பணிப்பினை இளைஞர்களில் ஆண்களிலும் பார்க்க பெண்கள் அதிகமாக வெளிப்படுத்துகின்றமையை, பால்நிலை சார்ந்து ஆய்வின் முடிவுகளைப் பிரித்து பார்க்கும் போது அறியக் கிடைக்கின்றது. உரு ஆ. 3-2 இல் நீங்கள் அதனைப் பார்க்க முடியும். 30%ஆன ஆண் இளைஞர்கள் பரீட்சையில் தேறுவதற்கு ஏதாவது ஒரு வகையான ஒழுங்கற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ளனர். இது உண்மையில் கவனம் செலுத்த வேண்டிய கண்டறிதலாகும். 5%ஆனவர்கள் மாத்திரமே, 'பரீட்சையில் தேறுவதற்கு எதனை செய்வதற்கு' தயாராக உள்ளனர்.




ஆ. 3-3: ஏமாற்றி தேறுவதற்குப் பதிலாக, பரீட்சையில் தோல்வியடைவதற்கான விருப்பம், வீடு அடிப்படையில்

நகர்ப்புற மற்றும் கிராமப்புற மாணவர்களுக்கு இடையிலான பிரிவினையும், இந்த ஆய்வு வெளிப்படுத்தியது. மீண்டும், கிராமப்புற மாணவர்கள் ஊழலில் ஈடுபடுவதற்கு தயாராக இருந்தனர். அத்துடன், ஒழுங்குசார் நடத்தைக்கு குறைந்தளவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தியிருந்தனர். ஊழல்சார் நிபந்தனைகளுக்கான உயர்மட்ட விருப்பினை இவை விளக்காத போதிலும், ஆசியர்கள் குறித்த அங்கத்தினை ஆய்விலிருந்து தீர்மானிக்க முடியும்.

## ஆ. 4 மிகவும் முக்கியமான ஆவணம் ஒன்றைப் பெறுதல்

ஏனைய அமைப்புக்களிலும் பார்க்க பொது துறை ஊழியர்கள் சார்ந்து ஊழலில் ஈடுபடுவதற்கு ஆர்வம் கொண்டவர்களாக பதிலளிக்கும் தரப்பினர் உள்ளமையை ஆய்வு வெளிப்படுத்துகின்றது. முக்கியமான ஆவணத்திற்கான அணுகும் வசதியைப் பெறுவதற்கு 30%ஆன இளைஞர்கள் ஒழுங்கற்ற நடத்தையில் ஈடுபடுவர். அத்துடன், 10%ஆன ஆண் இளைஞர்கள் இலஞ்சம் வழங்குவர். எவ்வாறாயினும், இளைஞர்களிற்கான ஒழுங்கு தரங்களில் எந்தவொரு மாற்றமும் இன்றி ஊழலுக்கான மறுசீரமைப்பாகவே இதனை பார்ப்பதனை பொது நிறுவன செயற்பாடு குறித்த முடிவுகள் (ஆ. 4-1), தெரிவிக்கின்றன. உரு 3.2-9இல் உள்ள முடிவுகள் பொது துறை அதிகாரிகளின் மோசமான செயற்பாடுகளைச் சார்ந்ததாகவே உள்ளன.




உரு ஆ. 4-1: ஒரு முக்கியமான ஆவணத்தைப் பெறுவதற்கு இலஞ்சம் கொடுப்பதற்கான விருப்பம், பால்நிலை அடிப்படையில்

நகர்ப்புற / கிராமப்புற பிரிவில் பார்க்கும் போது, கிராமப்புறத்தைச் சேர்ந்த பதிலளித்தவர்கள் வெளியுதவியை நாடுவதற்கு அல்லது முறையற்ற கொடுப்பனவை வழங்குவதற்கு தயாராக இருக்கின்றமையை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. கிராமப்புறப் பகுதிகளில் பொது துறை அதிகாரிகளின் மிகவும் மோசமான செயற்பாட்டினை பிரதிபலிக்கும் பதிலாக இதனை கருத முடியும். எனினும், நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களை பிரித்து பார்ப்பதற்கு இதனை பொருத்தி பார்க்க முடியாது.




உரு ஆ. 4-2: ஒரு முக்கியமான ஆவணத்தைப் பெறுவதற்கு இலஞ்சம் கொடுப்பதற்கான விருப்பம், வீடு அடிப்படையில்

## ஆ. 5 முறையற்ற தொழில் நியமனம்

தொழில் / பாடசாலை அனுமதி, அல்லது அவர்களது 'கனவு தொழிலைப்' பெறுவதற்கு முறையற்ற சலுகைக்கு அவர்கள் எவ்வாறு பதிலளிப்பர் என இந்த கேள்வியில் வினவப்பட்டது. தகுதியற்ற ஆம் என்பதிலிருந்து, தகுதியற்ற இல்லை என்பது வரையான நான்கு பதில்களில் ஒன்றை பதிலளித்தவர்கள் தெரிவு செய்தனர்.




உரு ஆ. 5-1: முறையற்ற தொழில் நியமனம் அல்லது பாடசாலை அனுமதியை ஏற்றுக் கொள்வதற்கான விருப்பம் (வீடு அடிப்படையில்)

சாதாரணமான பாடசாலை அனுமதி அல்லது தொழில் சலுகை தொடர்பில், இந்த முறையற்ற சலுகையை தாம் ஏற்றுக் கொள்வோம் என பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் தெரிவித்தனர் (ஆ. 5-1). கிராமப்புற மற்றும் நகர்ப்புறங்களில் இருந்து பதிலளித்தவர்களுக்கு இடையில் குறிப்பிடத்தக்க அளவு வேறுபாடு இருந்தது. 17%ஆன கிராமப்புறத்தைச் சேர்ந்த பதிலளித்தவர்கள் மாத்திரமே முறையற்ற சலுகையினை நேரடியாக புறக்கணிப்போம் எனத் தெரிவித்தனர். நகர்ப்புறத்தில் வசிப்பவர்களின் பதில் ஓரளவு நேர்மைத்திறன் சார்ந்ததாக இருந்தது. ஆனால், 73%ஆனவர்கள் உடனடியாக அல்லது காலம் தாழ்த்தி சலுகையை ஏற்றுக்கொள்வோம்

எனத் தெரிவித்தனர். கலாசார மற்றும் பொருளாதார காரணிகள் இரண்டையும் இணைக்கும் போது இந்த எண்ணிக்கை அதிகமானதாகும்.

பொருளாதார ரீதியாக, இலங்கையில் கல்வி மற்றும் பொருளாதார சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாகும். அத்துடன், அதற்கு இணையாக வறுமையும் உயர்ந்த நிலையில் உள்ளது. பதிலளித்தவர்கள் நடைமுறைக்கு ஏற்ற வகையில் இந்த கேள்விகளுக்கு பதிலளித்த போதிலும், அவர்களுடைய தனிப்பட்ட நிலைமைகள் அவர்களை மறுக்கவிடாது தடுக்கின்றது. கலாசாரமும் இதில் முக்கியமான பங்கினை வகிக்கின்றது. ‘ ாதாரணமான வழி’ என்ற வகையில் முறையற்ற சலுகையை ஏற்றுக் கொள்வோம் என 22%ஆன நகர்ப்புற இளைஞர்களும், 36%ஆன கிராமப்புற இளைஞர்களும் தெரிவித்தனர். குறித்த முறையற்ற சலுகையை ஒழுங்கு செய்த குடும்ப உறுப்பினரை திருப்திபடுத்துவதற்கு, இந்த சலுகையை ஏற்றுக் கொள்வோம் என 40%ஆன நகர்ப்புற இளைஞர்களும், 23%ஆன கிராமப்புற இளைஞர்களும் தெரிவித்தனர். பாடசாலை அனுமதிப் பெறுவதற்கும், தொழிலில் பதவியேற்றம் பெறுவதற்கும் உறவினர்களுக்கான சலுகை மற்றும் தனிப்பட்ட தொடர்புகளில் அதிகளவு தங்கியுள்ளமையை இந்த பதில்களில் இருந்து அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. தெற்காசியாவில் இது ஒரு புதிய விடயமல்ல. ஆனால், இது ஒரு பாரிய பிரச்சினை என்பதனையும் மறந்துவிடக் கூடாது. நகர்ப்புற / கிராமப்புற ரீதியில் பிரித்துப் பார்க்கும் போது, முறையற்ற தொழில் நியமனம் மற்றும் பாடசாலை அனுமதி என்பன கிராமப்புறங்களில் சாதாரணமாக நிகழ்வதனை கண்டறியக் கூடியதாகவிருந்தது. எவ்வாறாயினும், நகர்ப்புறங்களில் குடும்ப உறுப்பினரால் ஒழுங்கு செய்யப்படும் முறையற்ற வகையிலான தொழில் நியமனம் அல்லது கல்வி அனுமதியினை பெற்றுக் கொள்வது சௌகரியமானது என 40மூஆன பதிலளித்தவர்கள் கருதுகின்றனர். சமூகத்தில் சிறந்த நேர்மைத்திறனை நோக்கியதாக இலங்கை இளைஞர்கள் பணியாற்ற வேண்டுமாயின், இந்த கலாசார தடைகள் நீக்கப்படல் வேண்டும்.

## ஆ. 6 “கனவுத் தொழில்” சலுகை

எவ்வாறாயினும், “கனவுத் தொழில்” என்பது சார்ந்ததாக கேள்வி மாற்றப்பட்ட போது, கிடைத்த பதில்கள் ஆச்சரியமளிப்பவையாக இருந்தன. முறையற்ற வகையிலான சலுகையை ஏற்றுக் கொள்வதற்குப் பதிலாக, பெரும்பாலானோர் நேரடியாக இல்லை என சொல்வதாக தெரிவித்தனர். துரதிருஷ்டவசமாக, கேள்வியானது வேறு விதத்தில் இடம்பெற்றிருந்தது. இதன் காரணமாக நேர்த்தியான ஒப்பீடு என்பது சாத்தியமில்லை. எவ்வாறாயினும், இதிலிருந்து நேர்மைத்திறனை மீறாது பெறக் கூடிய விடயமாக “கனவுத் தொழில்” என்பது பெரும்பாலான இலங்கையர்களுக்கு உள்ளது என நீங்கள் தவறாக அர்த்தம் கொள்ள முடியாது. மட்டுப்படுத்தப்பட்ட முடிவிற்கான அதிகளவிலான சவால் குறித்து பார்க்கும் போது, இலங்கை இளைஞர்களின் எதிர்காலத்திற்கான நம்பிக்கையை உரு. 3.2-12 வழங்குகின்றது.




உரு ஆ. 6-1: உங்களுடைய ‘கனவு தொழிலைப்’ பெறுவதற்கு முறையற்ற தொழில் நியமனத்தை ஏற்றுக் கொள்வதற்கான விருப்பம்

# இ. நேர்மைத்திறன் தொடர்பான சூழல் மற்றும் செயற்பாடு

ஊழல் என்பது பேராசை மற்றும் அதிகாரத்திற்காக பயன்படுத்தப்படும் சக்தி வாய்ந்த ஆயுதம். ஊழலுக்கு எதிரான போராட்டம் என்பது சிக்கலானது. அனைத்து நாட்டு மக்களினதும் ஒருங்கிணைந்த முயற்சியில் அது தங்கியுள்ளது. இந்த காரணத்திற்காக, இலங்கையில் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கும், ஊழலுக்கு எதிராக போராடுவதற்கும் இளைஞர்கள் முக்கியமான பங்கினை வகிப்பதற்கான சாத்தியங்களை TISL ஆராய்ந்தது. அர்த்தம் மிக்க தகவல்களைப் பெறுவதற்கு, ஊழலுக்கு எதிராக போராடுவது தொடர்பில் இளைஞர்கள் எவ்வகையான பங்கினை வகிக்கலாம் என்பது தொடர்பில் பதிலளித்தவர்களிடம் வினவப்பட்டது. அவர்கள் தனிப்பட்ட வகையில் ஊழல் குறித்து கதைப்பதற்கு தயாராக உள்ளனரா மற்றும் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பாமல் இருப்பதற்கான காரணங்கள் எவை என்பது சார்ந்து இந்த கேள்விகள் அமைந்திருந்தன.




உரு இ. 1: இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில், ஊழலுக்கு எதிராக போராடுவதில் இளைஞர்களின் வகிபாகங்கள் குறித்த கருத்தாக்கங்கள்

ஊழலுக்கு எதிராக போராடுவதில் இளைஞர்கள் பாரிய பங்கினை வகிக்க முடியும் என 56%ஆன இளைஞர்கள் கருதுகின்றமை சாதகமான ஒரு அறிகுறியாகும். அதேவேளை, 33%ஆன இளைஞர்கள் ஆகக்குறைந்தது கட்டுப்படுத்தப்பட்ட பங்கினை வகிக்கலாம் என கருதினர். ஆச்சரியமளிக்கும் வகையில், தாம் பாரிய பங்கினை வகிக்க முடியும் என வயதானவர்களை விட இளைஞர்களே அதிக நம்பிக்கை கொண்டிருந்தனர். அதேவேளை, இளைஞர்களால் பாரிய பங்கினை வகிக்க முடியாது என்ற கருத்தினை வயதானவர்கள் கொண்டிருந்தனர்.




உரு இ. 2: இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில், ஊழலுக்கு எதிராக போராடுவதில் இளைஞர்களின் வகிபாகங்கள் குறித்த கருத்தாக்கங்கள், வீடு அடிப்படையில்

இந்த தரவுகள் பிரித்தறியப்பட்ட போது, நகர்ப்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களுக்கு இடையில் பாரிய வேறுபாடு கண்டறியப்பட்டது. ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு போதியளவு அதிகாரமுடையவர்களாக நகர்ப்புற இளைஞர்கள் கருதுகின்றனர். அத்துடன், அதிகாரமற்றவர்கள் என்ற உணர்வினை அவர்கள் ஏற்றுக் கொள்பவர்களாக இல்லை (உரு இ - 2 ஐப் பார்க்கவும்). பொதுவான அடிப்படையில் பார்க்கும் போது, ஊழல் தொடர்பில் சகித்துக் கொள்பவர்களாக கிராமப்புற இளைஞர்கள் உள்ளனர். அத்துடன், அவ்வப்போது முறையற்ற நடத்தையில் ஈடுபடுவதற்கு தயாரானவர்களாகவும் இருக்கின்றனர். இதனை புரிந்து கொள்ள முடிகின்றது. கிராமப்புறங்களில், ஊழல் தொடர்பில் அதிகாரமற்றவர்கள் என்ற உணர்வை இளைஞர்கள் கொண்டுள்ளனர். அதன் காரணமாக, தமது நாளாந்த வாழ்க்கையின் ஒரு அங்கமாக ஊழலை ஏற்றுக்கொள்பவர்களாக அவர்கள் இருக்கின்றனர். இதனால், ஊழலுக்கு எதிராக போராடுவதற்கு கிராமப்புற இளைஞர்களுக்கு அதிகாரமளிப்பதற்கான அதிகரித்த நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படல் வேண்டும்.




உரு இ. 3: இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் ஊழல் குறித்து அறிக்கைப்படுத்துவதற்கான விருப்பம்

ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கான விருப்பம் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது, கிடைத்த பதில்கள் மிகவும் சிக்கலானவையாகும். 7%ஆனவர்கள் மாத்திரமே ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பியுள்ளதாக தெரிவித்தனர். மேலும், சுமார் 27%ஆனவர்கள் ஊழலுக்கு எதிராக பேசியதே இல்லை எனத் தெரிவித்தனர். இளைஞர்களால் மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என ஆகக் குறைந்தது சுமார் 20%ஆன இளைஞர்கள் நம்புகின்றனர். எனினும், தாமாகவே முன்வந்து அதனை முன்னெடுப்பதற்கு அவர்கள் தயாராக இல்லை.

பதிலளித்தவர்களில் மூன்றில் ஒருவர், ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு எப்போதும் தயாராக உள்ளமை என்பது நம்பிக்கை தரக்கூடிய விடயமாகும். அதே எண்ணிக்கையிலான மற்றுமொரு பங்கினர் சில சந்தர்ப்பங்களில் குரல் எழுப்புபவர்களாகவும், சில சந்தர்ப்பங்களில் குரல் எழுப்பாதவர்களாகவும் உள்ளனர். எவ்வாறாயினும், இலங்கை சமூகம் என்பதன் அடிப்படையில் இந்த பதில்கள் புரிந்துகொள்ளப்படல் வேண்டியது மிகவும் முக்கியமாகும்.

கொடூரமான யுத்தத்தில் இருந்து மீண்டு வரும் நிலையில், ஐக்கிய நாடுகள் சபை, மனித உரிமைகள் கண்காணிப்பகம் மற்றும் சர்வதேச முரண்பாடுகள் தொடர்பான குழுவினால், இலங்கையின் மனித உரிமைகள் செயற்பாடு கேள்விக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.[7] ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பினால், பெரும்பாலான இளைஞர்கள், முக்கியமாக சிறுபான்மை இனத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தமது எதிர்காலம் மற்றும் பௌதீக பாதுகாப்பு தொடர்பில் சிக்கல் ஏற்படும் என்ற கருத்தைக் கொண்டவர்களாக உள்ளனர். உரு இ-4இல் கண்டவாறு, இலங்கையில் உள்ள இளைஞர்களில் நால்வரில் ஒருவர், அச்சம் காரணமாக ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பாதவர்களாக உள்ளனர்.




உரு இ. 4: ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பாது இருப்பதற்கு வழங்கும் காரணங்கள், பால்நிலை அடிப்படையில்

எவ்வாறாயினும், ஊழலுக்கு எதிராக குரல் எழுப்பாமைக்கான காரணமாக அது பயனற்றது என தாம் உணர்ந்ததாக கூறியிருந்தமை மிகவும் முக்கியமாக குறிப்பிடப்பட்ட விடயமாக அமைகின்றது. பெயரளவில் ஜனநாயகம் விளங்கும் இலங்கை போன்ற நாட்டில் இது மிகவும் சிக்கல் நிறைந்த பதிலாகும். ஊழலுக்கு எதிராக தாம் முக்கியமான பங்கினை வகிக்க முடியும் என பெரும்பாலான இலங்கை இளைஞர்கள் கருதுகின்ற அதேவேளை, இவர்களில் சுமார் அரைப்பங்கினர் (45%) குரல் எழுப்புவதினால் எவ்வித பயனும் இல்லை என கருதுகின்றனர். அத்துடன், 23%ஆன இளைஞர்கள் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவது தமது கடமை இல்லை என கருதுகின்றனர். இது துரதிருஷ்டவசமானது. ஏனெனில், ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவது என்பதன் முக்கியத்துவத்தினை அறிந்து கொள்வதற்கான கல்வியறிவின்மையை இது புலப்படுத்துகின்றது. ஊழல் குறித்து அறிக்கையிடுவதற்கான நடைமுறைகள் தமக்குத் தெரியாது என 6%ஆன இளைஞர்கள் பதிலளித்துள்ளமையானது இந்த கருத்துக்கு வலுசேர்ப்பதாக உள்ளது.

இதனால், இலங்கை போன்ற சூழ்நிலை நிலவும் நாடுகளில், குறிப்பிட்ட நிபந்தனைகள் எட்டப்பட்டால் மாத்திரமே ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு இளைஞர்கள் தயாராக இருக்கின்றார்கள் என்ற நிலை காணப்படுகின்றது. முதலாவது, அவ்வாறு செய்வது பாதுகாப்பானது என்ற உணர்வை அவர்கள் பெறல் வேண்டும். இரண்டாவது, ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதன் முக்கியத்துவம் தொடர்பிலும், நடைமுறை வாழ்க்கையில் அது ஏற்படுத்தக்கூடிய நன்மைகள் குறித்தும் அவர்கள் நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

போதிய கல்வியறிவின்மையும், விழிப்புணர்வின்மையும் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதில் இருந்து இளைஞர்களை தடுக்குமாயின், ஊழல் குறித்து இளைஞர்கள் எங்கு கற்றுக் கொள்கின்றனர் என்று புரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகும். இந்த இறுதிப் பிரிவில், ஊழல் குறித்த தகவல்களை இளைஞர்கள் எங்கிருந்து பெறுகின்றனர் மற்றும் இலங்கையில் உள்ள ஊழலுக்கு எதிரான விதிகள் மற்றும் நிபந்தனைகள் குறித்து எத்தனையளவு அறிந்துள்ளனர் என்பது குறித்து பதிலளிப்பவர்களிடம் வினவப்பட்டது.

பதிலளித்தவர்களில் பெரும்பாலானோர் தொலைக்காட்சி (31%), வானொலி (20%), மற்றும் பத்திரிகை (17%) என்பவற்றில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டுள்ளனர். இது ஆச்சரியமான விடயம் அல்ல. எவ்வாறாயினும், பதிலளித்த இளைஞர்களில் குறிப்பிட்ட எண்ணிக்கையிலானோர் கைபேசி மூலமாகவும் (18%) இந்த தகவலைப் பெற்று வருகின்றனர். வயதானவர்களை (10%) விட இந்த அளவு அதிகமாக உள்ளது. இளைஞர்களின் கலந்துரையாடல்கள் சமூக வலையமைப்புக்கள் மற்றும் இணையத்துடன் மையமானதாக அமைகின்ற வேளையில், இது உண்மையானது அல்ல என்பதனை ஆய்வின் முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

5%ஆன இளைஞர்கள் மாத்திரமே சமூக ஊடகத்தில் இருந்து தகவல் பெற்றுக் கொண்டதாக தெரிவித்தனர். 4%ஆன இளைஞர்கள் இணைய பத்திரிகைகள் ஊடாகவும், 4%ஆனவர்கள் சமூக வலையமைப்புக்களில் இருந்து தகவல்களைப் பெற்றுக் கொண்டதாக தெரிவித்தனர். சமூக ஊடகம் மற்றும் இணையத்தளங்களில் ஊழலுக்கு எதிரான கல்வியை இணைப்பதற்கு மேலும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டிய தேவை உள்ளமையை இந்த முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், இணையத்தள பாவனை கட்டுப்படுத்தப்பட்ட ஒரு நாடாக இலங்கை தொடர்ந்தும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.[8]




உரு இ. 5: இளைஞர்கள் மற்றும் வயதானவர்களின் தகவலுக்கான மூலம்




உரு இ. 6 இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் இலங்கையில் உள்ள ஊழல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குகள் குறித்த அறிவு

பிரதான முடிவுகள்

பல்வேறு வகையான வழிகளில் இருந்து இளைஞர்கள் தகவல்களைப் பெறும் அதேவேளை, எந்தவொரு தகவல் மூலமும் இளைஞர்களுக்கு போதிய தகவல்களை வழங்கவில்லை என்பதும் தெளிவாகின்றது. தகவல் மூலங்கள் அனைத்திலும் முன்னிலை வகிக்கின்ற போதிலும், தொலைக்காட்சி என்பது 31%ஆன இளைஞர்களை சென்றடைகின்றது.

ஊழல் தொடர்பான விதிகள் மற்றும் நெறிமுறைகள் குறித்து எவ்வளவு தூரம் அறிந்து வைத்துள்ளார்கள் என இளைஞர்களிடம் கேட்கப்பட்ட போது, போதிய தகவல்கள் இன்மை என்பது தெளிவாக வெளிப்பட்டது. 6%ஆன இளைஞர்கள் மாத்திரம், ஊழல் குறித்த விதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பில் அதிகம் அறிந்து வைத்துள்ளதாக தெரிவித்தனர். சுமார் 39%ஆனவர்களுக்கு ஓரளவு தெரிந்திருக்கின்ற நிலையில், 55%ஆனவர்களுக்கு சிறிதளவு தெரியும் அல்லது ஒன்றும் தெரியாது.

சூழ்நிலையுடன் தொடர்புடைய மேலும் பல பதில்களை கண்டறிவதற்கு இந்த தகவல் உதவியாக இருந்தது. ஊழல் விதிகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பில், சில இளைஞர்களுக்கு சிறந்த பிடிப்பு இருக்கின்ற நிலையில், பெரும்பாலானோருக்கு இல்லை. இதனால், குறிப்பிட்ட எண்ணிக்கையிலான பதிலளிப்பவர்கள் நேர்மைத்திறன் குறைந்தவர்களாக அல்லது முறையற்ற நடத்தைகளை ஏற்றுக்கொள்பவர்களாக உள்ளமையை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது. இந்த புறக்கணிப்பினை சூழ்நிலையுடன் இணைந்ததாக புரிந்து கொள்ள வேண்டும்.

துரதிருஷ்டவசமாக, கல்வி முறைமையானது இந்த பிரச்சினையை அடையாளப்படுத்துவதாக இல்லை. உரு 3.3-5 உள்ளவாறு, ஊழல் மற்றும் விதிமுறைகள் குறித்து அறிந்து கொள்வதற்கு 'ஒன்றும் தெரியாதவர்கள்' அல்லது 'சிறிதளவு தெரிந்தவர்கள்' என்ற நிலையானது, முதல் நிலை கல்வி மட்டத்திலிருந்து மூன்றாம் நிலை கல்வி மட்டத்திற்குச் செல்லும் 61%இலிருந்து 54%ஆக மாத்திரமே வீழ்ச்சியடைந்துள்ளது. 'ஓரளவு' தெரியும் எனக் கூறிய இளைஞர்களின் எண்ணிக்கையானது 7%ஆல் அதிகரித்துள்ள நிலையில், 'அதிகம்' தெரியும் என்பவர்களின் எண்ணிக்கையில் எந்த மாற்றமும் இல்லை. ஊழல் விதிகள் மற்றும் நெறிமுறைகள் தொடர்பான இளைஞர்களின் கல்வித் தேவைகளை இந்த கல்வி முறைமையானது பூர்த்தி செய்யவில்லை என்பதனை இந்த முடிவுகள் வெளிப்படுத்துகின்றன. ஊழல் தொடர்பில் இலங்கை இளைஞர்களுக்கு முறையான கல்வி வழங்கப்படுமாயின், ஊழல் குறித்த எண்ணக்கருக்கள், உளப்பாங்குகள் மற்றும் செயற்பாடுகளை மாற்றுவதற்கு ஓரளவு சந்தர்ப்பமே உண்டு.




உரு இ. 7: இளைஞர்கள் மற்றும் வயதானவர்கள் மத்தியில் இலங்கையில் உள்ள ஊழல் தொடர்பான விதிகள் மற்றும் ஒழுங்குகள் குறித்த அறிவு, கல்வி அடைவுக்கு ஏற்ப

ஊழல் விதிகள் மற்றும் விதிமுறைகளை அறிந்து கொள்வதற்கு வயதானவர்களிலும், இளைஞர்கள் அதிக அக்கறை கொண்டவர்களாக உள்ளனர். இந்த வேறுபாடானது சிறியதாக இருந்த போதிலும், வயதானவர்கள் குறிப்பாக மட்டுப்படுத்தப்பட்ட கல்வி அடைவைக் கொண்டவர்களே, ஊழல் குறித்த போதிய அறிவு இல்லாதவர்களாகவும் இருக்கின்றனர். மூன்றாம் நிலை கல்வியில் உள்ளவர்களுக்கான முடிவுகள் மாற்றப்பட்டுள்ளன. நன்கு கல்வி கற்றவர்கள், ஊழல் விதிகள் மற்றும் நெறிமுறைகளை நன்கு அறிந்து வைத்தவர்களாக உள்ளனர். உறுதியான தீர்மானம் ஒன்றை எடுப்பதற்கு இந்த முடிவு போதியது அல்ல. மூன்றாம் நிலை கல்வியில் உள்ள சிக்கல் நிலையை அறிந்து கொள்வதற்கு இந்த முடிவுகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும்.


MENU

# முடிவுரைகள் மற்றும் பரிந்துரைகள்

YISஇன் நோக்கம் இரு இலக்குகளைக் கொண்டது:- இலங்கை இளைஞர்களின் தற்போதைய நேர்மைத்திறன் தொடர்பான அடிப்படை ஒன்றை தயாரித்தல் மற்றும் நேர்மைத்திறன் மீறல் மற்றும் ஊழலுக்கு எதிரான இளைஞர்கள் ஈடுபடும் அளவை நிர்ணயித்தல். அர்த்தமுள்ள வகையில் இந்த இரண்டு இலக்குகளும் எட்டப்பட்டுள்ளன. இலங்கை இளைஞர்கள் நேர்மைத்திறனுக்கு மதிப்பினை வழங்குகின்றனர் என்பதனையும், நாளாந்த வாழ்க்கையில் இந்த விழுமியங்களை எட்டுவதில் சிக்கலை எதிர்கொள்கின்றனர் என்பதனையும் ஆய்வு முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. போராடுவதற்கான முக்கியமான விடயமாக நேர்மைத்திறன் என்பதனை பார்ப்பதற்கு பதிலாக, ஊழலும், நேர்மைத்திறன் மீறலும் தாம் பார்க்கும் உலகத்தின் யதார்த்த நிலையில் பாதிப்பை ஏற்படுத்துகின்றன என்பதனை இலங்கை இளைஞர்கள் உணர்ந்து கொள்ளல் வேண்டும்.

## அ. முடிவுரைகள்

YISஇன் நான்கு பிரதான பரப்பெல்லைகளை பின்வரும் கலந்துரையாடல் அடையாளப்படுத்துகின்றது. அத்துடன், ஒவ்வொருவருடைய பிரதான கண்டுபிடிப்புக்கள் மற்றும் முடிவுரைகளை கலந்துரையாடுகின்றது. YISஇன் நோக்கங்களை எட்டுவதற்கு மாத்திரம் இந்த தகவல் மிகவும் முக்கியமானது அல்ல. நடவடிக்கைக்கான பரிந்துரைகளை கண்டறியக் கூடிய அறிவினை கட்டியெழுப்புவதும் இதன் நோக்கமாகும்.

### அ. 1 தார்மீகம் மற்றும் ஒழுங்குகள் - நடத்தையின் தரங்கள் தொடர்பான கருத்துசார் புரிந்துணர்வு

ஊழல் குறித்த இளைஞரின் கருத்தாக்கங்கள், உளப்பாங்குகள் மற்றும் விழுமியங்கள் தொடர்பில் பல்வேறு பரப்பெல்லைகளை ஆராய்ந்ததன் மூலம், வேதனைக்குரிய முடிவு வெளிப்பட்டது. நேர்மைத்திறன் என்றால் என்ன என்பதனை இலங்கை இளைஞர்கள் அறிந்து வைத்துள்ளனர். தமது சொந்த வாழ்க்கையில் அவர்கள் நேர்மைத்திறனிற்கு மதிப்பு வழங்குகின்றனர். நேர்மைத்திறன் என்பது முக்கியமானது என்ற சாதகமான நிலைப்பாட்டினை இளைஞர்கள் கொண்டிருக்கும் அதேவேளை, தடைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் மூலம் நேர்மைத்திறன் சவாலுக்கு உட்படுத்தப்படும் இந்த நிலைப்பாடு கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது. நேர்மைத்திறன் குறித்த வேறுபட்ட வரைவிலக்கணங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பிய போது, குறிப்பிட்ட எண்ணிக்கையிலான சிறுபான்மையினர் (12%-20%), பொய் பேசாது இருத்தல், ஊழல் மற்றும் சட்டத்தை மீறல் உள்ளடங்கலாக நேர்மைத்திறனை விளக்கும் பொதுவான வரைவிலக்கணம் குறித்து அறியாதவர்களாக உள்ளனர். சட்டத்தை மீறல் என்பது தொடர்பில் இந்த கருத்து கடுமையானதாக உள்ளது. ஏனெனில், ஐந்தில் ஒரு இலங்கையர் சட்டத்தை மீறலை நேர்மைத்திறன் மீறலாக கருதுவதில்லை என்ற முடிவினை இந்த ஆய்வு வெளிப்படுத்தியுள்ளது.

'நேர்மைத்திறனுடைய நபர்' என்பதனை குறிப்பதற்கான சிறந்த புரிந்துணர்வை இலங்கை இளைஞர்கள் கொண்டுள்ளனர். அண்ணளவாக இலங்கை இளைஞர்களில் அரைப்பங்கினர், நேர்மைத்திறன் கொண்ட நபர் ஒருவர் தவிர்க்க முடியாத சந்தர்ப்பங்களில் பொய் அல்லது ஏமாற்றுவதற்கு நேர்கின்றது என்ற கருத்தைக் கொண்டுள்ளனர். நேர்மைத்திறன் உடையவர்கள் பொய் பேசுதல், ஏமாற்றுதல் மற்றும் சட்டத்தை மீறல் என்பவற்றிலும் குடும்ப ஐக்கியத்திலும் அதிக கவனம் செலுத்துகின்றார்கள் என்ற நம்பிக்கை நிலவுகின்றது (உருக்கள் 3.1 -11-12). இறுதியாக, நேர்மைத்திறனுடைய நபர்கள் பெயரளவிலான ஊழலில் ஈடுபடுவதற்கு தயாராக உள்ளனர் என்ற கருத்தை 67%ஆன இலங்கை இளைஞர்கள் ஏற்றுக் கொண்டனர்.

## அ. 2 கோட்பாடுகள் - எது சரியானது மற்றும் எது பிழையானது என்பதற்கு இடையிலான வேறுபாட்டை அறிந்து கொள்ளக் கூடிய இயலுமை

நிதி வெற்றி மற்றும் நேர்மைத்திறனுடன் வாழ்வது என்பவற்றை ஒப்பிடுமாறு கேட்கப்பட்ட போது, இலங்கையில் வெற்றிக்கான அழுத்தங்களின் போது, நேர்மைத்திறன் குறித்த கோட்பாடுகளை விட்டுக்கொடுக்கும் நிலை உள்ளமை தெளிவாகின்றது. நேர்மைத்திறனுடன் வாழ்வது மிகவும் முக்கியமானது என 50%ஆன இளைஞர்கள் கருதும் அதேவேளை, செல்வந்தராக இருப்பதும், நேர்மைத்திறனுடனும் இருப்பது என இரண்டுமே சம அளவில் அமைய வேண்டும் என பெரும்பாலானோர் கருதினர். மேலதிகமாக, ஐவரில் ஒரு இலங்கை இளைஞர்கள் நேர்மைத்திறனை விட்டுகொடுத்துவிட்டு பணத்தை தெரிவு செய்கின்றனர். இளைஞர்களால் நேர்மைத்திறன் தொடர்பில் வெளிப்படுத்தப்பட்ட தகவல்களுக்கு நேர்மாறானதாக இந்த முடிவுகள் உள்ளன.

இவற்றை ஒன்றிணைத்துப் பார்க்கும் போது, நேர்மைத்திறனின் முக்கியத்துவத்தை இளைஞர்கள் அறிந்து வைத்துள்ளனர், ஆனால், நேர்மைத்திறனுடன் வாழ்தல் என்பதன் அர்த்தத்தை அவர்கள் புரிந்தவர்களாக இல்லை. நேர்மைத்திறன் என்பது எப்போது அடிப்படை கோட்பாடாக இருந்ததில்லை. இருப்பினும், உள்ளூர் பண்பாடுகள் மற்றும் யதார்த்தங்களை சவாலுக்குட்படுத்தும் ஒரு கருத்தாக்கமாக இருக்கின்றது. இலங்கை இளைஞர்கள் தமது வாழ்க்கையில், சில பயன்களும், உறவுகளும் நேர்மைத்திறனை விட முக்கியமானது என கருதுகின்றனர். அத்துடன், சில சந்தர்ப்பங்களில் நேர்மையற்ற செயலில் ஈடுபட்டாலும், நேர்மைத்திறனை தக்க வைத்துக் கொள்ளலாம் என்ற கருத்தையும் ஒரு சிலர் கொண்டுள்ளனர். உணவு மற்றும் எரிபொருள் விலை என்பது நாளாந்தம் துரிதமாக அதிகரித்துச் செல்லும் நிலையில், இலங்கையில் வறுமை என்பது முக்கியமான பிரச்சினையாக உள்ளது என்பதனை எவரும் மறுக்க முடியாது. இதன் காரணமாக செல்வந்தர்கள் மற்றும் வறியவர்களுக்கு இடையிலான இடைவெளியும் அதிகரித்துச் செல்கின்றது. இதனால், நேர்மைத்திறனை விட்டுக்கொடுத்து செல்வம் பெறுவது தொடர்பில் இளைஞர்கள் அக்கறை செலுத்தி வருகின்றனர்.

இளைஞர்களில் பெண்கள் நேர்மைத்திறன் தொடர்பில் அதிகளவிலான அர்ப்பணிப்பனை கொண்டுள்ளமையையும், கிராமப்புற இளைஞர்கள் நேர்மைத்திறனில் பலவீனமானவர்களாக உள்ளமையையும் இந்த YIS வெளிப்படுத்துகின்றது. பெரும் எண்ணிக்கையிலான திரட்டப்பட்ட தரவுகளில் இருந்து இந்த இடைவெளிகள் உறுதி செய்யப்பட்டுள்ளன. மாற்றத்தின் முகவர்களாக நகர்ப்புற பெண்கள் இருக்கின்றார்கள் என்ற எதிர்வுகூறலை இந்த ஆய்வின் முடிவுகள் தெரிவிக்கின்றன. அதேவேளை, நேர்மைத்திறன் தொடர்பான கல்வி மற்றும் மேம்பாடு என்பன கிராமப்புற இளைஞர்களுக்கு, முக்கியமான கிராமப்புறத்தைச் சேர்ந்த ஆண்களுக்கு அவசியம் என்பதனையும் இந்த கற்கை முடிவுகள் வெளிப்படுத்தியுள்ளன. இந்த இடைவெளிகளுக்குப் பின்னாலுள்ள காரணங்களை கண்டறிவது சிக்கலானது. கல்வி மட்டங்களுக்கு இடையில் பால்நிலை வேறுபாடுகள் தொடர்ச்சியானதாக உள்ளன. இலங்கை கலாசாரத்துடன் தொடர்புடையதாக இந்த வேறுபாடுகள் காணப்படுகின்றமையை அறிந்து கொள்ளக் கூடியதாகவுள்ளது.

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறங்களுக்கு இடையிலான வேறுபாடும் சிக்கல் நிறைந்தது. கிராமப்புற இளைஞர்கள் அதிகளவில் ஊழலை எதிர்கொள்வதாகவும், பெரும்பாலான சந்தர்ப்பங்களில் பண்பாட்டுசார் உறவினர்களுக்கு சலுகை அளிக்கும் சமூகத் தொடர்புகளில் ஈடுபடுவதனையம் கற்கையின் மூலம் கண்டறியக் கூடியதாகவிருந்தது. நேர்மைத்திறனுடன் உள்ள இளைஞர்களுக்கு சிறிதளவு சந்தர்ப்பங்களே உள்ளதாகவும் கிராமப்புற இளைஞர்கள் கருதுகின்றனர். இதன் காரணமாக, அன்றாட வாழ்க்கையில் முறையற்ற சலுகைகளை ஏற்றுக் கொள்வதில் அவர்கள் தயக்கம் காட்டுவதில்லை. எனவே, கிராமப்புற இளைஞர்கள் நேர்மைத்திறன் அற்றவர்கள் என்ற முடிவுக்கு இதிலிருந்து வரமுடியாது. தமது வாழ்க்கைக்கு உகந்த விழுமியங்களையும், நடத்தைகளையும் உள்வாங்குவதற்கு கட்டாயப்படுத்தப்பட்டவர்களாக அவர்கள் உள்ளனர். அந்த விழுமியங்களும், நடத்தைகளும் நேர்மைத்திறனுக்கு எதிரானதாக அமைந்திருக்கின்றது.

## அ. 3 விதிகளை மதித்தல் - சட்ட வரைபுநகலுடன் பொருந்திப் போகும் அளவு

நேர்மைத்திறனை விளக்குமாறு கேட்கப்பட்ட போது, சட்டத்தை மீறுவதிலும் பார்க்க, பொய் கூறல் மற்றும் ஏமாற்றுதல் அல்லது ஊழல் என்பவற்றையே நேர்மைத்திறன் மீறலாக கருதுவதனை அறிந்து கொள்ளக் கூடியதாகவிருந்தது. இலங்கை இளைஞர்கள் சட்ட ஒழுங்கு தொடர்பில் தெளிவான எதிர்ப்பு நிலையைக் கொண்டுள்ளமையை இந்த முடிவுகள் விளக்குகின்றன. உதாரணமாக, ஆசிரியருக்கு இலஞ்சம் வழங்குவதிலும் பொது அதிகாரிகள் அல்லது பொலிஸாருக்கு இலஞ்சம் வழங்குவது தொடர்பான அக்கறை அதிகம் உள்ளவர்களாக இளைஞர்கள் உள்ளனர். பொலிஸார் மீதான நம்பிக்கை இன்மை என்பதற்கு இவ்வாறான உளப்பாங்கிற்கான பிரதான காரணங்களில் ஒன்றாக இருக்கலாம்.

ஒட்டுமொத்தமாக, ஊழலில் ஈடுபடுவது தொடர்பில் ஆச்சரியமிக்க விருப்பினை வெளிப்படுத்தியிருந்தனர். அவர்களில் சிலர் கடந்த வருடத்தில் ஊழல் செயற்பாட்டில் ஈடுபட்டவர்கள் என்பதனையும் குறிப்பிட்டிருந்தனர். நேர்மைத்திறன் தொடர்பிலும், ஊழலுக்கு எதிராகவும் இளைஞர்களின் அர்ப்பணிப்பினை கல்வி வலுப்படுத்த வேண்டும் என இந்த கற்கை தெரிவிக்கின்றது.

ஊழல் பரிமாற்றங்களில் ஈடுபடுவதில் ஆண்கள் அதிக ஆர்வம் கொண்டவர்களாக இருக்கின்றார்கள் என்பதனை குறிப்பிட வேண்டியது முக்கியமாகும். நேர்மைத்திறனின் விழுமியங்கள் தொடர்பிலான பால்நிலை சார் வேறுபாடு எனவும் இதனை குறிப்பிடுவது சிக்கலானது. இளைஞர்களில் ஆண்கள் அதிகளவில் ஊழலுக்கான சாத்தியங்களை கொண்டிருப்பதனால், அவர்களே அதிகளவில் ஊழல் செயற்பாட்டில் ஈடுபடுபவர்களாகவும் உள்ளனர். இந்த சிக்கல் நிறைந்த முறையை புரிந்து கொள்வதற்கு உதவியாக மேலும் ஆய்வுகள் முன்னெடுக்கப்படல் வேண்டும். நேர்மைத்திறன் குறித்த புரிந்துணர்வை மேம்படுத்துவதற்கும், ஊழலை தவிர்ப்பதற்கும் ஆண் இளைஞர்கள் இலக்கு வைக்கப்பட வேண்டும் என்பதே இதில் அறிந்து கொள்ளக் கூடிய விடயமாகும்.

## அ. 4 ஊழலை புறக்கணித்தல் - ஊழல் செயற்பாடுகளை சவாலுக்கு உட்படுத்தும் ஆற்றல்

ஊழலுக்கு எதிராக போராடுவதில் தமது தலைமுறைக்கான பங்கு ஒன்று உள்ளது என பெரும்பான்மையான இளைஞர்கள் கருதுகின்றனர். இது கவனம் செலுத்தப்பட வேண்டிய மிகவும் முக்கியமான முடிவாகும். எவ்வாறாயினும், 6%ஆன இலங்கை இளைஞர்கள் மாத்திரமே ஊழலுக்கு எதிராக உண்மையாக குரல் எழுப்பியுள்ள நிலையில், ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் இளைஞர்கள் குறிப்பிடத்தக்க பங்கினை வகிக்கவில்லை என்பது தெளிவாகின்றது. எவ்வாறாயினும், பெரும் எண்ணிக்கையிலான இளைஞர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் அல்லது சில சந்தர்ப்பங்களில் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்கு தயாராக இருக்கின்றார்கள். எண்ணத்திற்கும், நடவடிக்கைக்கும் இடையிலான இந்த வேறுபாடானது தனிப்பட்டதாகவும், கட்டமைப்புச் சார்ந்ததாகவும் உள்ளது.

ஊழலே வெற்றிக்கான சிறந்த பாதை என கருதும் போது, அந்த நிலையை இளைஞர்கள் சவாலுக்கு உட்படுத்துவார்கள் என எண்ணுவது சரியற்றது. துரதிருஷ்டவசமாக, பெரும்பாலான இலங்கை இளைஞர்கள், ஏமாற்றுவதனை சிறந்த தெரிவாக கருதுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் அது மாத்திரமே வெற்றிக்கான வழி என அவர்கள் கருதுகின்றனர். கல்வி கற்ற கிராமப்புற இளைஞர்கள் மத்தியில் இந்த கருத்து பொதுவானதாக உள்ளது. ஊழலின் மூலம் வெற்றியைப் பெறும் குழுக்களுடன் இவர்களுக்கு இடையிலான தொடர்பினையும் இது வெளிப்படுத்துவதாக உள்ளது.

இலங்கையில் பொது சேவை வழங்குனர்கள் தொடர்பில் பெரும்பாலான இளைஞர்கள் கொண்டுள்ள மோசமான கருத்தினை இந்த முடிவு வெளிப்படுத்துகின்றது. உயர்மட்ட ஊழல் மற்றும் குறைந்தளவிலான பொது மக்கள் நம்பிக்கை என்பனவற்றில் சுட்டிக்காட்டப்படும் அங்கங்களாக பொலிஸ் மற்றும் உள்ளூர் நிர்வாகம் என்பன உள்ளன. இவ்வாறான குழுக்களுடனான தொடர்ச்சியான தொடர்புகள், நேர்மைத்திறனை பேணுவதற்கான, மேம்படுத்துவதற்கான இளைஞர்களின் ஆற்றலை குறைத்து விடும். பொது உத்தியோகத்தர்களுடன் அதிகரித்த அளவில் தொடர்புடைய குழுக்கள் நேர்மைத்திறன் தொடர்பில் சௌகரியமான மற்றும் மதிப்பற்ற நிலையை கொண்டுள்ளமையையும் முடிவுகள் மூலம் அறியக் கூடியதாகவுள்ளது.

கட்டமைப்பு ரீதியாக, ஊழலுக்கு எதிராக செயற்படுவதற்கு தாம் அதிகாரமற்றவர்கள் என மூன்றில் ஒரு இளைஞர் கருதுகின்றனர். ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவது தமது பொறுப்பு அல்ல என 26%ஆன இளைஞர்கள் கருதுகின்றனர். இந்த இரண்டு நம்பிக்கைகளும் சிக்கல் நிறைந்தவை. அத்துடன், ஒதுக்கப்படல் மற்றும் விலகிச் செல்லல் என்பன, ஊழலுக்கு எதிரான இளைஞர்களின் முயற்சிகளுக்கு பாதிப்பினை ஏற்படுத்தக் கூடியன. எவ்வாறாயினும், நேரடியான தீர்வுகளை கண்டறிவதற்கும் இவை முக்கியமான பிரச்சினைகளாக உள்ளன.

## ஆ. பரிந்துரைகள்

அறிவு பெற்றுக் கொள்வதற்கான கருவியை விட முக்கியமான ஒரு அம்சமாக YIS உள்ளது. நேர்மைத்திறனுக்காக போராடல் மற்றும் ஊழலுக்கு எதிராக போராடல் என்பவற்றிற்காக இளைஞர்களை வலுப்படுத்தும் சர்வதேச ரீதியில் ஒன்றிணைக்கப்பட்ட முழுமையான செயற்பாடாக இது உள்ளது. இந்த அறிக்கையிலிருந்து தமது முடிவுகளை பெற்றுக் கொள்வதற்கான வசதியளித்தலை தமது பங்குதாரர்களுக்கு TISL வழங்கியுள்ள நிலையில், இலங்கையில் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான பின்வரும் பரிந்துரைகளையும் TISL வழங்கியுள்ளது. இந்த பரிந்துரைகளை நிஜமாக்குவதற்கு அனைத்து சம்பந்தப்பட்ட பங்குதாரர்களுடனும் TISL இணைந்து பணியாற்றும் என்பதுடன், இளைஞர்களில் நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான செயற்பாட்டில் இணைந்து கொள்ள விரும்பும் அனைவரையும் வரவேற்கின்றது.

### ஆ. 1 ஊழல் மற்றும் நோமைத்திறன் தொடர்பான ஆய்வு

இலங்கையில் இளைஞர், நேர்மைத்திறன் மற்றும் ஊழல் தொடர்பில் முக்கியமான அடிமட்ட தகவல்களை YIS வழங்குகின்றது. எவ்வாறாயினும், இந்த தகவல்கள், நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கான புதிய பல கேள்விகளையும் எழுப்பியுள்ளன. மிகவும் முக்கியமாக, இளைஞர்கள் மத்தியில் உறுதியான கிராமப்புற / நகர்ப்புற பிரிவுக்கான காரணங்கள்,நேர்மைத்திறன் மற்றும் ஊழல் தொடர்பில் முக்கியமான தகவல்களை இளைஞர்கள் எட்டுவதற்கான வினைத்திறன் மிக்க வழிகள் எவை, மற்றும் நேர்மைத்திறன் தொடர்பில் பெண்கள் அதிக அர்ப்பணிப்பை வெளிப்படுத்துவதற்கான காரணத்தை எவ்வாறு புரிந்து கொள்வது என்பன குறித்த மேலதிக தகவல்கள் அவசியமாகும். இந்த ஆய்வுக்கு மற்றுமொரு கற்கை அவசியமில்லை. இதன் மூலம் பெறப்பட்ட அறிவுத் தளத்தைப் பயன்படுத்தி மூன்று அணுகுமுறைகளை TISL நடைமுறைப்படுத்தும். முதலாவது, தேசிய நேர்மைத்திறன் முறைமைகள் மதிப்பீடு மற்றும் பிரஜைகள் பதிவு படிவ ஆய்வு அறிக்கைகள் நடைமுறையில் உள்ள பிரசுரங்களை TISL மீள பதிப்பித்தல் மற்றும் இந்த முடிவுகளை YISஉடன் ஒப்பிட்டுப் பார்த்தல். இரண்டாவது, ஆய்வு முடிவுகள் தொடர்பான முக்கிய கேள்விகளுக்கு பதிலளிப்பதற்கு சம்பந்தப்பட்ட குழுக்களுடன் முறைசாரா நேர்காணல்களை முன்னெடுப்பதற்கு தற்போதுள்ள பங்குதாரர்கள் மற்றும் பங்காளர்களுடன் TISL இணைந்து செயற்படும். இளைஞர் முயற்சிகளின் கீழ் நிகழ்ச்சிகள் நடைமுறைப்படுத்தப்படுவதனால், கண்காணித்தல் மற்றும் மதிப்பீடு செய்தலை TISL தொடர்ந்து வலுப்படுத்தும். மேலே பட்டியலிடப்பட்ட கேள்விகள் தொடர்பான எண்ணக்கருக்கள் மற்றும் தரவுகளை இந்த பொறியமைப்புக்கள் உருவாக்கும். இந்த மூன்று கருவிகளும் அறிவு இடைவெளிகளை பூர்த்தி செய்வதுடன், இளைஞர்கள் மத்தியில் வெற்றிகரமான நேர்மைத்திறனை மேம்படுத்துவதற்கு வுஐளுடுஇற்கு உதவும்.

### ஆ. 2 பாடசாலைகளில் கல்வியை மேம்படுத்தல்

முதல் நிலை கல்வியிலிருந்து மூன்றாம் நிலை கல்வியை நோக்கி இளைஞர்கள் தேர்ச்சி பெறுகின்ற போது, ஊழல் விதிகள் மற்றும் விதிமுறைகள் தொடர்பான அறிவு ஓரளவே வளர்ச்சியடைந்துள்ளதாக ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. பாடசாலை முறைமையில் ஊழல் மற்றும் நேர்மைத்திறன் தொடர்பில் இளைஞர்கள் முக்கியமான கல்வியைப் பெறுவதில்லை என்பதனை இது வெளிக்காட்டுகின்றது. இந்த மேம்பாட்டிற்காகவும், சம்பந்தப்பட்ட கல்வி ஆவணங்கள் கிடைக்கப் பெறுவதற்கும் தனிப்பட்ட ஆசிரியர்கள், சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள் மற்றும் அரசாங்க அலுவலகங்களுடன் TISL இணைந்து பணியாற்றும். இந்த கல்வி ஆவணங்கள் வாசிப்பதற்கான ஆவணங்கள், ஒழுங்கு தொடர்பான பிரசுரங்கள், விழுமியங்கள் மற்றும் தார்மீக நடத்தை என்பன கற்றல் மற்றும் முழுமையாக புரிந்து கொள்ளலுக்கு ஏற்ற வகையில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அதிகளவிலான வறுமை உள்ள நிலையிலும், உறுதியான கல்வி முறையையும் இலங்கை பேணுகின்றது. அத்துடன், உயர்ந்தளவிலான எழுத்தறிவு மட்டத்தையும் இலங்கை கொண்டுள்ளது. இதனால், இந்த செயற்பாட்டியில் பாடசாலைகளும், ஆசிரியர்களும் செயற்றிறன் மிக்க பங்காளர்களாக இருப்பர். தேவையான ஆவணங்கள் மற்றும் பயிற்சியை வழங்குவதன் மூலம், ஊழலுக்கு எதிரான இந்தப் போராட்டத்தில் இளைஞர்களை வலுப்படுத்துவதற்கான உறுதியான கல்வி முறையை வழங்குவதற்கு TISL எதிர்பார்க்கின்றது.

### ஆ. 3 பாடசாலைக்குப் பின்னர் கல்வி மற்றும் அறிவினை கட்டியெழுப்பல்

கல்வியின் முக்கிய அங்கங்களாக பாடசாலைகள் விளங்குகின்ற நிலையில், முறைசார் பாடசாலை முறைமைக்கு அப்பால், இளைஞர்களுடன் பணியாற்றுவதற்கான சிறந்த சந்தர்ப்பங்களையும் TISL பார்க்கின்றது. நேர்மைத்திறன் மற்றும் ஊழல் குறித்த ஆழமான புரிந்துணர்வை பெறுவதற்கு உற்சாகமான இளைஞர்களுக்கு சந்தர்ப்பம் கிட்டும். அத்துடன், அவர்கள் தாமாகவே சமூக மாற்றத்திற்கான முகவர்களாக மாறுகின்றனர். TISL இளைஞர் நிகழ்ச்சியின் ஊடாக ஊழலுக்கு எதிரான போட்டியில் உண்மையான தலைவர்களாக மாறுவதற்கான கருவிகளை பெற்றுக் கொள்ளக் கூடிய சந்தர்ப்பம் இளைஞர்களுக்கு கிடைக்கும். கொழும்புக்கு வெளியில் உள்ள இளைஞர்களுக்கும் இந்த சந்தர்ப்பங்களை பெற்றுத் தருவதற்கு TISL எதிர்பார்க்கின்றது. ஆய்வில் குறிப்பிட்டவாறு, கிராமப்புற இளைஞர்களே பிரதான இலக்குக் குழுவாக இருத்தல் வேண்டும். இதனால், குறித்த மேலதிக நடவடிக்கைகள் மற்றும் வளங்கள் இளைஞர்களுக்கு கிடைப்பதனை உறுதி செய்வதற்கு கிராமப்புறத்தில் உள்ள பங்காளர்களுடன் இணைந்து TISL பணியாற்றும்.

### ஆ. 4 நிரூபிக்கப்பட்ட முயற்சியுடன் ஊழலை கண்காணிப்பதில் இளைஞர்களை மேம்படுத்தல்

பெரும்பாலான இளைஞர்கள் ஊழலுக்கு எதிராக குரல் எழுப்புவதற்காக தயாராக இருக்கின்றனர் எனவும், ஒரு சிலர் குரல் எழுப்பியுள்ளனர் எனவும் YIS நிரூபித்துள்ளது. ஊழலுக்கு எதிராக போராடுவதற்கான இளைஞர்களின் சந்தர்ப்பங்களை அதிகரிப்பதற்கு TISL பணியாற்றும். அத்துடன், அவர்களுக்கு உதவி தேவையான சந்தர்ப்பத்தில், உதவி செய்யும். புத்தாக்கம் மிக்க சமூக ஊடக கருவிகளையும், ஊழலால் பாதிக்கப்பட்டவர்களுக்கும், சாட்சியங்களுக்கும் சட்ட உதவியை வழங்கும் நிலையமான நேர்மைக்கான புகலிடம் என்ற சேவையையும் பயன்படுத்தி, இளைஞர்களுக்கு TISL நேரடியாக உதவும். தமது எண்ணங்கள் மற்றும் சிந்தனைகளை வெளிப்படுத்துவதற்கான தளத்தையும் TISL இளைஞர்களுக்கு வழங்கும். ஊழலுக்கு எதிரான போட்டிகள் மற்றும் புத்தாக்கமான மூலோபாயங்கள் ஊடாக ஊழலுக்கு எதிரான போராட்டங்களிலும் பங்களிக்கும்.

ஊழலுக்கு எதிராக எவ்வாறு குரல் எழுப்புவது மற்றும் அவர்களுடைய முயற்சிகள் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற உணர்வை ஏற்படுத்துவது என்பன மிகவும் முக்கியமானது என்பதனை இளைஞர்களை அறிந்து கொள்ளச் செய்ய வேண்டும். இதனால், ஊழல் சம்பந்தப்பட்ட விடயங்களை பதிவு செய்தல் மூலோபாயங்களை மேம்படுத்துவதற்கும், ஊழல் சம்பந்தப்பட்ட விடயங்களை கண்காணித்தல் மற்றும் ஊழலுக்கு எதிரான செயற்பாடுகளின் தாக்கம் குறித்த கல்வியை வழங்குவது தொடர்பிலும் TISL பணியாற்றும். இளைஞர்களுக்கான சர்வதேச மட்டத்திலான பார்வையை விரிவுபடுத்துவதற்கு YISஇன் ஊடாக உருவாக்கப்பட்ட சர்வதேச வலையமைப்புக்களை TISL பயன்படுத்தும். இதன் மூலம் ஊழலுக்கு எதிரான சர்வதேச ரீதியான போராட்டத்தில் தாமும் ஒரு அங்கம் என்ற உணர்வை இளைஞர்கள் பெறுவர். அத்துடன், ஏனைய நாடுகளில் உள்ள வெற்றிகரமான மூலோபாயங்களின் அனுபவங்களில் இருந்தும் கற்றுக் கொள்வர்.

### ஆ. 5 பல்லூடகம் மற்றும் சமூக ஊடகம் வழியாக நேர்மைத்திறனின் விழுமியங்களை மேம்படுத்தல்

இலங்கை இளைஞர்கள் நேர்மைத்திறனை மதிக்கின்ற அதேவேளை, சில சந்தர்ப்பங்களில் இது மதிக்கப்படாத விழுமியங்களாகவும் இருக்கின்றது. எனவே, நேர்மைத்திறனின் அர்த்தமுள்ள விழுமியங்களை மேம்படுத்துவதற்கான பிரசாரங்களை TISL முன்னெடுக்கும். பெரும்பாலான மாணவர்கள் இது சார்ந்த தகவல்களை தொலைக்காட்சி மற்றும் வானொலியில் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். இதேவேளை, கைபேசி மூலமாக தகவல் பெறுபவர்களின் எண்ணிக்கையும் அதிகரித்து வருகின்றது. இந்த ஊடகங்களை இலக்கு வைக்கும் TISL, நேர்மைத்திறன் தொடர்பான பயனுள்ள தகவல்களை இளைஞர்களைச் சென்றடையச் செய்வதற்கு முக்கியமாக கைபேசிகளையும், வானொலியையும் பயன்படுத்தும். நேர்மைத்திறனுக்கான நிரூபிக்கப்பட்ட அர்ப்பணிப்பின் அடிப்படையில் நேர்மைத்திறன் சார்ந்த விழுமியங்கள் மேம்படுத்தப்படும். அதேவேளை, இந்த விழுமியங்கள் வலுப்படுத்தப்படுவதுடன், தெளிவுபடுத்தப்படும்.

### ஆ. 6 இளைஞர்களுக்கான முன்மாதிரிகளை உருவாக்கல்

பொய் பேசுவதும், ஏமாற்றுவதும் வெற்றிக்கு அவசியமான பாதை என பெரும்பாலான இலங்கை இளைஞர்கள் கருதுகின்றனர் என்ற உண்மையை YIS வெளிப்படுத்தியுள்ளது. நேர்மைத்திறன் தொடர்பில் சௌகரியமான எண்ணங்களை கொண்டுள்ளவர்களையே இளைஞர்களும் மதிக்கின்றனர். மேலதிகமாக, இலஞ்சம் வழங்குவதில் பிழையில்லை என பெரும்பாலான இளைஞர்கள் கருதுகின்றனர். சிலர் ஈடுபடவும் செய்கின்றனர்.

இளைஞர்கள் எப்போதும் வழிகாட்டிகள் மற்றும் கதாநாயர்களின் வழிகாட்டல் தேவையுள்ளவர்களாக உள்ளனர். இந்த முன்மாதிரிகள் இளைஞர்களின் உளப்பாங்குகள் மற்றும் விழுமியங்களின் அடிப்படையை மாற்ற முடியும். எனவே, உண்மையான நேர்மைத்திறனை வெளிப்படுத்தும் மற்றும் இந்த தவறான கருத்தாக்கங்களை நிராகரிக்கும் மேலதிக முன்மாதிரிகள் இலங்கை இளைஞர்களுக்கு தேவையாக உள்ளது. இந்த முயற்சிகளில் முன்னாள், இன்னாள் பொது பிரபலங்களும், அளப்பரிய செயற்பாடுகளை முன்னெடுத்த சாதாரண இலங்கையர்களும் உள்ளடக்கப்படல் வேண்டும். நேர்மைத்திறன் சார்ந்து அளப்பிரிய சேவையில் ஈடுபடுபம் இலங்கையர்களை கௌரவிக்கும் வகையில் ஏற்கனவே வருடாந்த நேர்மைத்திறன் விருது வழங்கலை TISL முன்னெடுத்து வருகின்றது. நேர்மைத்திறனுடையவராக இருந்தும் இலங்கையில் வெற்றி பெற முடியும் என இலங்கை இளைஞர்கள் அறிந்து கொள்ள வேண்டியதும் அவசியமாகும். இதனால், வர்த்தக, அரசாங்க மற்றும் பொழுதுபோக்கு துறைகளில் அளப்பரிய சேவை செய்பவர்களை கண்டறிந்து, அவர்களை பொது மக்கள் அறியச் செய்யும் வகையில் TISL கௌரவிக்கும்.

தனிப்பட்ட அடிப்படையில், TISL கல்வி மற்றும் செயற்பாட்டு நிகழ்ச்சியில் ஈடுபடுவதற்கு தெரிவு செய்யும் இளைஞர்களும், ஆலோசனை உதவியை TISL ஊழியர்களிடம் இருந்து பெற்றுக் கொள்கின்றனர். இந்த செயற்பாடு போதியளவு தாக்கத்தை கொண்டிராத போதிலும், இளைஞர்களின் ஆற்றலில் அது போதியளவு தாக்கத்தை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இளைஞர்களை அறிவு மற்றும் வழிகாட்டல் மூலம் வலுப்படுத்தலானது, இலங்கை இளைஞர்களை சக்தி மிக்க மாற்றத்தின் முகவர்களாக உருவாக்கும்.

### ஆ. 7 இளம் பெண்களுடன் பணியாற்றல்

சமூகத்தில் பெண்களை மாற்றத்தை ஏற்படுத்தும் குழுவாக வலுப்படுத்துவதற்கு, TISL கல்வி நடவடிக்கைகள் இளம் பெண்களை இலக்கு வைக்கும். இலங்கையின் இளம் பெண்கள் நேர்மைத்திறன் மற்றும் ஊழலுக்கு எதிராக உறுதியான அர்ப்பணிப்பினை கொண்டிருப்பதனை லுஜளு நிரூபித்துள்ளது. இந்த இளம் பெண்களுக்கு ஊக்குவிப்பு வழங்குவதுடன், அவர்களுக்குத் தேவையான கல்வி, ஆதரவு மற்றும் வழிகாட்டலை TISL வழங்கும்.

இலங்கையில் பெண்கள் பொதுவாக ஒதுக்கப்பட்டவர்களாக உள்ளனர். இருப்பினும், குடும்பத்திலும், சமூகத்திலும் செல்வாக்கு நிறைந்த வகிபாகம் ஒன்றையும் அவர்கள் வகிக்கின்றனர். ஊக்கமிக்க இளம் பெண்களுடன் பணியாற்றுவதன் மூலம், நேர்மைத்திறனுக்கான போராட்டம் மற்றும் ஊழலுக்கு எதிரான போராட்டத்தில் பெண் தலைவர்கள் அடங்கிய புதிய தலைமுறை ஒன்றை உருவாக்குவதற்கு TISL எதிர்பார்த்துள்ளது.

### ஆ. 8 கிராமப்புற ஊழலை இலக்கு வைத்தல்

மேலே முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளின் அடிப்படையில், கிராமப்புற பகுதிகளை TISL முக்கியமாக இலக்கு வைக்கும். இலங்கையில் உதவியும், ஆதரவும் பொதுவாக மூலதனம் தொடர்பிலேயே கவனம் செலுத்தி வருகின்றது. கிராமப்புற மக்களுக்கு கிடைக்கும் உதவிகள், பொதுவாக மோதல் மற்றும் இயற்கை அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் அவசர கால உதவிகளைப் போன்றதாகும். கிராமப்புற சமுதாயங்களுடன் மட்டுப்படுத்தப்பட்ட ஈடுபாட்டிற்கு அப்பால் இந்த செயற்றிட்டம் செல்லும். அத்துடன், இலங்கையின் அனைத்து இளைஞர்களிலும், இன அல்லது வதியும் இடம் சார்ந்த பாகுபாடின்றி, தாக்கம் செலுத்துவதற்கு எதிர்பார்த்துள்ளது.

தகவல், பொருளாதார சந்தர்ப்பங்கள், சுகாதார பராமரிப்பு மற்றும் இன்னும் பிற விடயங்களுக்கான அணுகும் வசதி தொடர்பில் இலங்கை கிராமப்புற மக்கள் தொகை மேலும் ஒதுக்கப்பட்டதாக உள்ளது. கிராமப்புற இளைஞர்களால் எதிர்நோக்கப்படும் சவால்களை TISL அடையாளம் கண்டுள்ளது. அத்துடன், இளைஞர் நிகழ்ச்சிகளில் இந்த இளைஞர்கள் உள்ளடக்கப்படுவதனையும், மேம்படுத்துவதனையும் TISL உறுதி செய்கின்றது.

### ஆ. 9 பொலிஸார் மற்றும் பொது உத்தியோகத்தர்களின் ஊழலை இலக்கு வைத்தல்

பொலிஸார் மற்றும் பொது உத்தியோகத்தர்களின் ஊழல் என்பது இலங்கையில் நன்கு அறியப்பட்ட பிரச்சினையாக உள்ளது. துரதிருஷ்டவசமாக, இந்த குழுக்களின் ஊழல் செயற்பாடுகள், இளைஞர்களில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன், நேர்மைத்திறன் மிக்கவர்களாக இளைஞர்கள் வாழ்வதில் பாதிப்பினையும் ஏற்படுத்துகின்றன. இந்த வகையான ஊழல் செயற்பாடானது இளைஞர்கள், அவர்களது விழுமியங்கள், உளப்பாங்குகள் மற்றும் நேர்மைத்திறனுக்காக குரல் எழுப்பல் தொடர்பில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்துகின்றது என YIS தெரிவிக்கின்றது.

தமது வரலாறு முழுவதிலும், இவ்வகையான ஊழலை நிறுத்துவது தொடர்பிலான அர்ப்பணிப்பை TISL நிரூபிக்கின்றது. புதிய அறிவு மற்றும் புதிய வளங்களை வழங்குவதன் மூலம் இந்த செயற்பாடு தொடர்பில் புதிய முன்னணி ஒன்றை YIS ஆரம்பிக்கின்றது. ஊழல் செயற்பாடுகளை புறக்கணிப்பதற்கு, ஊழல் கோரல்களை குறைப்பதற்கு மற்றும் பொலிஸார், பொது உத்தியோகத்தர்கள் மத்தியில் நேர்மைத்திறனை வலுப்படுத்துவதற்கான புதிய மூலோபாயங்களை வடிவமைப்பதற்கு இளைஞர்களுடன் இணைந்து TISL பணியாற்றும்.

# நிறைவுக் குறிப்புகள்:

1. உத்தியோகப்பூர்வ அரசாங்க புள்ளிவிபரங்களின் அடிப்படையில், 2012ஆம் ஆண்டில் மொத்த உள்நாட்டு உற்பத்தி 6.5%இனால் அதிகரித்துள்ளது. 2008ஆம் ஆண்டு ஏற்பட்ட பாரிய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் இந்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளது. மேலும், 2012ஆம் ஆண்டில் கைத்தொழில்சார் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் பங்கு 10% வளர்ச்சியை கண்டுள்ளது. எதிர்கால சம்பளம் மற்றும் வருமான வளர்ச்சிக்கு சிறந்த அடித்தளம் ஒன்று உள்ளமையை இந்த தரவுகள் வெளிப்படுத்துகின்றன. பார்க்கவும்: http://www.statistics.gov.lk/national_accounts/Press%20Release/GDP%20Summary%20Indicators%202012%20Annual.pdf.

2. மாகாண மட்டத்தில் இளைஞர் மற்றும் வயதானவர்களின் எண்ணிக்கை மற்றும் வீதங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

| | இளைஞர்கள் | | வயதானவர்கள் | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|
| | N | % | N | % | N | % |
| மத்திய | 55 | 5.5 | 55 | 5.4 | 110 | 5.5 |
| கிழக்கு | 109 | 10.9 | 92 | 9.1 | 201 | 10.0 |
| வடமேல் | 107 | 10.7 | 117 | 11.6 | 224 | 11.1 |
| வடமத்திய | 64 | 6.4 | 62 | 6.1 | 126 | 6.3 |
| வடக்கு | 45 | 4.5 | 47 | 4.6 | 92 | 4.6 |
| சப்ரகமுவா | 162 | 16.1 | 160 | 15.8 | 322 | 16.0 |
| தெற்கு | 73 | 7.3 | 75 | 7.4 | 148 | 7.3 |
| ஊவா | 54 | 5.4 | 64 | 6.3 | 118 | 5.9 |
| மேற்கு | 335 | 33.4 | 340 | 33.6 | 675 | 33.5 |
| மொத்தம் | 1004 | 100.0 | 1012 | 100 | 2016 | 100.0 |




உரு: கிராமப்புறம் மற்றும் நகர்ப்புறம் என்பதன் அடிப்படையில் பதிலளித்தவர்களின் மாதிரி

3. அதிகளவு கிராமப்புறங்களைக் கொண்ட நாட்டின் மத்திய, வட மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் நகர்ப்புற மாகாணங்கள் (மேற்கு மற்றும் தெற்கு மாகாணங்கள்) குறிப்பிடத்தக்க அளவு மாற்றத்தை கொண்டுள்ளமையை உத்தியோகப்பூர்வ அரசாங்க புள்ளிவிபரங்கள் வெளிப்படுத்துகின்றன. பெண்கள் வேலைவாய்ப்பின்றி இருப்பது அதிகமாக உள்ளது. ஒட்டுமொத்தமாக பார்க்கும் போது, கிராமப்புறங்களைச் சேர்ந்த பெரும்பாலானவர்கள் கூலி (விவசாயம், காடு) தொழிலில் அதிகம் ஈடுபடுகின்றனர். போக்குவரத்துக்கான மூலம், சமைத்தலுக்காக விறகுகளில் தங்கியிருத்தல் மற்றும் குழாய் நீருக்கான அணுகும் வசதி போன்ற உரிமைத்துவங்கள், போன்ற அடிப்படை குறிகாட்டிகள் கிராமப்புறங்கள் மற்றும் நகர்ப்புறங்களில் பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளன. இது பொதுவாக 30-50%ஆனதாக உள்ளது. மாகாண அடிப்படையில் பிரிக்கப்பட்ட சமூக-பொருளாதார புள்ளிவிபரங்களுக்கான முழுப்பார்வை.
http://www.cbsl.gov.lk/pics_n_docs/10_pub/_docs/statistics/other/Socio_Econ_%20Data_2011_e.pdf

4. பால்நிலை அதிகாரமளித்தல் மற்றும் பாரட்பசம் தொடர்பான உறுதியான விதிகளை இலங்கை கொண்டுள்ளது. அத்துடன், பால்நிலை சார் கல்வி தொடர்பிலும் சிறந்த தேர்ச்சியைக் கொண்டுள்ளது. எவ்வாறாயினும், யதார்த்தமாக பார்க்கின்ற போது, வறிய அல்லது ஒதுக்கப்பட்ட பெண்கள், இன்னல் நிறைந்தவர்களாகவும், பால்நிலை சமத்துவமற்றவர்களுமாகவே தொடர்ந்தும் உள்ளனர். வேலைவாய்ப்பு தொடர்பில் துரதிருஷ்டமானவர்களாக பெண்கள் உள்ளனது. வீட்டில் சமத்துவமான பங்கினைப் பெறுவதில் எதிர்ப்புகளை எதிர்கொள்கின்றனர். உதாரணமாக, யுத்தத்தினால் அதிகம் பாதிக்கப்பட்ட மாகணங்களில், ஓரளவு எண்ணிக்கையிலான பெண்கள் தொழில் வலுக்களாக பயன்படுத்தப்படுகின்றனர். உதாரணமாக, வட மாகாணத்தில், பெண்கள் வேலைவாய்ப்பு 14மூஆக உள்ளது. (இலங்கை அரசாங்கத்தின் உத்தியோகப்பூர்வ புள்ளிவிபரங்களைப் பார்க்க)
http://www.cbsl.gov.lk/pics_n_docs/10_pub/_docs/statistics/other/Socio_Econ_%20Data_2011_e.pdf).
இதன் விளைவாக, தமது ஆண் பங்காளர்களிலும் பார்க்க பெண்களின் நாளாந்த அனுபவங்கள் வேறுபட்டதாகவே உள்ளன. இதற்கு தனிப்பட்ட கலாசார அடையாளங்கள் என்ற காரணம் கூறப்படுகின்றது. YISஇற்கு வழங்கப்பட்ட பதில்களிலும் இந்த வேறுபாடு பிரதிபலிக்கின்றது. இலங்கையின் பால்நிலை தொடர்பான மேலதிக தகவல்களுக்கு, இலங்கை பால்நிலைசார் மதிப்பீடு பகுதியைப் பார்க்கவும். ஆசிய அபிவிருத்தி வங்கி, 2008. (http://www2.adb.org/Documents/Reports/CGA-SRI/CGA-sri.pdf இல் கிடைக்கும்) அத்துடன், சுவர்ணா ஜயவீர மற்றும் சந்திர குணவர்த்தன, சமூக உள்ளடக்கல்: தெற்காசியாவில் கல்வி பரிமாற்றத்தில் பால்நிலை மற்றும் சமத்துவம், இலங்கை சம்பவ கற்கை. ஐக்கிய நாடுகளின் சிறுவர் நிதியத்தின் தெற்காசியாவுக்கான பிராந்திய அலுவலகம் (http://www.unicef.org/rosa/Unicef_Rosa%28Srilanka_case_study%29.pdf இல் கிடைக்கின்றது).

5. உள்ளூர் ஆட்சிமுறை மற்றும் பொலிஸ் சேவைகள் மட்டத்தில் கிராமப்புற மக்கள் தொடர்ச்சியாக எதிர்கொள்ளும் ஊழல் நிர்ப்பந்தங்களை TISL தேசிய நேர்மைத்திறன் ஆய்வும் (2010), பிரஜைகள் தேர்ச்சி அறிக்கையும் (2011) வெளிப்படுத்தியுள்ளன. மேலதிக தகவல்கள் http://www.tisrilanka.org இல் கிடைக்கும்.

6. இலங்கையின் பெரும்பாலான பொது சேவை அலுவலகங்களில் ஆழமான நம்பிக்கையீனம் மற்றும் ஏமாற்றம் என்பன காணப்படுவதனை TISLஇன் தேசிய நேர்மைத்திறன் ஆய்வு (2010) வெளிக்கொணர்ந்தது. எவ்வாறாயினும், உள்ளூர் ஆட்சிமுறை மற்றும் பொலிஸ் சேவைகளில் இந்த உணர்வு கடுமையானதாக இருந்தது. தேசிய நேர்மைத்திறன் ஆய்வின் முழுமையான வடிவத்தைப் பெறுவதற்கு, http://www.tisrilanka.org/pub/reports/NIS_SL_2010.pdf.

7. நாட்டில் நீண்ட நாட்கள் நீடித்த யுத்தத்தின் இறுதி நாட்டிகளில் முன்னெடுக்கப்பட்ட யுத்த குற்றங்கள் தொடர்பான குற்றச்சாட்டுக்களை விசாரணை செய்யுமா இலங்கை அரசாங்கத்திற்கு தூண்டல் செய்யும் தீர்மானம் ஒன்றினை 2012ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை நிறைவேற்றியது. யுத்தத்தின் இறுதிப் பகுதியில் தமிழ் அகதிகளை மோசமாக நடத்தியமை தொடர்பான அரசாங்கத்தின் மீதான கடுமையான சர்வதேச கண்டனங்களின் ஒரு படிநிலையாக இந்த தீர்மானம் உள்ளது. 2013 மனித உரிமைகள் கண்காணிப்பகம் அறிக்கையைப் பார்க்கவும், இலங்கை அத்தியாயம் (http://www.hrw.org/world-report/2013/country-chapters/sri-lanka இல் கிடைக்கின்றது) இலங்கை அதிகார மாற்றம்: சர்வதேச நடவடிக்கைக்கான தேவை. ஆசிய அறிக்கை N°243 20 பெப்ரவரி 2013. (http://www.crisisgroup.org/en/regions/asia/south-asia/sri-lanka/243-sri-lankas-authoritarian-turn-the-need-forinternational-action.aspx இல் கிடைக்கின்றது).

8. ஊடக அரச சார்பற்ற நிறுவனமான Freedom House இற்கு அமைய, 2011ஆம் ஆண்டில் இலங்கைக்கு 15%ஆன இணையத்தள கிரகித்தல் சக்தி உள்ளமை கண்டறியப்பட்டது. இந்த எண்ணிக்கையானது அதிகரித்துச் செல்லும் நிலையில், சிறிதளவான பொருளாதார தேர்ச்சியை வெளிப்படுத்தும் நாடுகளின் மத்தியிலும், இவ்வாறான குறைந்த அளவிலான இணையத்தள அணுகும் வசதி என்பது வழமைக்கு மாறானது.

## நேர்மைத்திறன் பற்றி....

## இளைஞர்கள் என்ன நினைக்கின்றனர்?

### ஆய்வு அறிக்கை

Transparency International Sri Lanka
183/5, High Level Road, Colombo 6, Sri Lanka
Phone: 011 4369781 - 3
Fax: 011 2506419
Email: tisl@tisrilanka.org
Web: www.tisrilanka.org

9 789551 281601